தென்மொழி

தமிழுணர்வில்லாத பிறவிகளைப் போற்றாதீர்!

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும்,
தமிழினத்தின் எழுச்சிக்கும்
தமிழ்நிலத்தின் விடுதலைக்கும்,
குமிழ்க்காத வெறுநெஞ்சும்—
கூறாத தோல்வாயும்—
குதித்தெழா மரத்தின் காலும்—
சிமிழ்க்காத புண்கண்ணும்—
செய்யாத கூன்கையும்
சினக்காத வெற்றுணர்வும்—
இமிழ்க்கின்ற கடல்நிலத்துள்—
எங்கோவோர் வெற்றிடத்தில்
எவ்வுருவோ டிருக்கு மாயின்,

அவ்வுருவைத் தமிழுருவாய்—
அவ்வுடலைத் தமிழுடலாய்—
அவ்வுயிரைத் தமிழி னுயிராய்—
எவ்வகையும் கொள்ளாதீர்;
எம்மதிப்பும் கொடுக்காதீர்;
எவ்வழியும் இணைசெய் யாதீர்!
ஒவ்வாதீர் அதன்பேச்சை;
உரையாதீர் அதனிடத்தில்;
உறையாதீர் அதனோ டென்றும்!
செவ்வகையிற் பிறந்திருக்கும்
செம்பிறவி என்றதனைச்
சிறிதேனும் போற்றி டாதீர்!

(தொடர்ச்சி உள்ளே...)

சுவடி : 24
ஓலை : 10

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00

நமக்கு வந்த மடல்கள்.

O : 1334 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு!

தங்களுக்குப் பணிவான வணக்கங்கள். தாங்கள் பட்ட துன்பம் தொல்லைகளை அறியும் பொழுது நெஞ்சு பதை பதைக்கிறது.

போலித்தனத்திலும், கவர்ச்சியிலும் சிக்கிச் சீரழியும் தமிழர்களுக்கு உண்மை எது-என்று கூட அறிய இயலா இழிநிலையே தொடர்கிறது.

ஆரியர்களை எதிர்த்த மாவீரன் இராவணன் அன்று அழிக்கப் பட்டான். இன்றோ வெற்றியின் விளிம்பில் இருந்த மாவீரன் பிரபாகரன், விபீடணர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டுத் தமிழீழத்தில் பல விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுகின்றன.

தமிழின மீட்சிக்குப் போராடும் — செயல்படும் — உண்மையான தமிழர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் தோல்விதான் மிஞ்சும் போலும்! தாங்கள் கூறியுள்ளதைப் போல,

'தமிழனைத் தமிழனே தாழ்த்துகின் றானே
தமைமீட்க எழுவோரைப் புறம் வீழ்த்து வானே'!

— என்ற நிலையே தொடர்கிறது.

தமிழின் இரண்டகர்(துரோகி)களும், பகைவர்களும் வெற்றி உலா வருவதைக் கண்ணுறும் பொழுது நெஞ்சம் குமுறுகின்றது; நொந்து கலுழ்கின்றது, ''பண்புடையார் பட்டுண் டுலகம்'' என்பது போல நல்ல தமிழர்கள் சிலர் தங்களின் இதழ்களைத் தாங்குவார்கள் என்ற நம்பிக்கையில் முடிக்கிறேன். தவறுகளுக்கு மன்னிக்கவும். தங்கள் உண்மையுள்ள,

— கோ. இரவிச்சந்திரன், சென்னை-24.

O : 1335 : உயர்திரு ஐயா அவர்களுக்கு!

தாங்கள் தனிமையில் துணிவுடன் மூன்று இதழ்களை நடத்துவது கண்டு நான் வியப்பும் பெருமையும் அடைந்து கொள்ளுவதுண்டு. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் நிலுவை வைத்துக் கொண்டு வணிக நோக்கமாகக் கருதுபவர்கள் என்று தான் உணரப்போகிறார்களோ தெரியவில்லை. எளிமையான வாழ்க்கையில் பொருளியல் சிக்கலோடு நடத்தும் நிலையை எத்தனை அன்பர்கள் அறிவார்களோ தெரியவில்லை. தங்களன்பு மகன் பொழிலன் மற்றும் முகிலன், இளங்கோ, இன்னும் எத்தனையோ விடுதலை வீரர்களின் உணர்வுகளை அவர்கள் சிறைக்கூடத்திலிருக்கும் நிலமையை உணர்வோர் எத்தனைப் பேர்கள் உண்டு என்பதும் புரியவில்லை, தாங்கள் மார்ச்சு மாதத்தோடு நிறுத்துவது குறித்து எழுதியிருந்தீர்கள். தங்கள் விருப்பம் எதுவோ, அதற்கு ஆதரவு உண்டு. தமிழ் நாட்டின் பற்றால் தங்கள் நலம் பாராது உழைக்கும் உண்மையை அறிந்தவன் என்பதனால் மடல் எழுதுகிறேன். தாங்கள் கலைஞர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(அட்டைப்பாடல் தொடர்ச்சி)

தசைத்திரளை யாய்மதிப்பீர்!
தான்தோன்றி யாய்நினைப்பீர்!
தமிழினத்தில் தவறித் தோன்றி
வசைக்குரிய இழிவுருவாய்
வாய், மூக்கு, கண், காது
வைத்தவெறுஞ் சடலம் என்றே,
இசைத்தெண்ணி அதைத்தவிர்ப்பீர்!
எச்செல்வம் எவ்வறிவோ
டிருந்திடினும் இகழ்ந்து செல்வீர்!
திசைத்துலவும் இவ்வகையில்
தமிழரென்று பலபிறவி
திரிதருமால் தேர்ந்து கொள்வீர்!

சிந்தனையில்...!

பிரஞ்சுப் பேரறிஞன் விக்தர் கியூகோ வின் இளிச்சவாயன்'-களாக நாம் இருப்போம். ஏனெனில் அந்த இளிச்சவாயன் புரட்சிக்காரன். இலெனினுக்குப் புத்தெழுச்சியூட்டியிருக்கிறன். இலக்கியம் பண்ணும் எமுச்சிகளை அறிந்துள்ள நாம் தமிழின எழுச்சிக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் படைத்தளித்த படைக்கலன்களைக் கையிலெடுப்போம்! அதனுல் எதிரிகள் நடுநடுங்கட்டும். பிழைக்கத் தெரியாத பித்தர்கள் என்று நம் எதிரிகள் கொடுத்த பட்டமளிப்புகள் நமது திசையில் நாம் செல்கின்ருேம் என்பதை உறுதி செய்கின்றன.

சிங்கிசு ஐத்மாத்தவ் எழுதிய 'குல்சாரி' கதையைப் படித்துக் கொண்டிருந்தபோது, தானுபாய் வேகம்பற்றி அவனின் நண்பன் சோரோ கூறுகிறன்... ''தனியே ஓடிப்போய் உலகப் புரட்சி நடத்திட முடியாதென்று உனக்குத் தெரியும். எல்லாரும் வருகிறவரை காத்துக் கொண்டுதான் இருத்தல்வேண்டும்,'' இந்த உரை என் நெஞ்சில் உறைக்கிறது. எனவே, நான் 'புரட்சிக்கு வருகின்றவரை', எதிர்பார்த்திருக்க வேண்டுமா என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன்- சிந்தனை, செயல் நடப்பில் புரட்சி வேண்டும். அதற்கென்னையும் என் சார்பையும் ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் வேண்டும். தொடர்ச்சியான மாற்றத்திற்கு என்னை அணியப்படுத்திக் கொள்வேன். என் சார்புகளை அவ்வழிப்படுத்திட முயல்வேன். அதற்கென் பொறுமை உதவும்.

—தமிழன்—

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டுவிட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

(தொலைபேசி : 847829

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

சுவடி 24] உ௦ககூ மீனம் (பிப்-மார், 89') [ஓலை 10:

கலைஞர் முன்னுள்ள முப்பெரும் பணிகள்!

தமிழக முதல்வர் கலைஞர் அருட்செல்வனாரின் (கருணாநிதியின்) வலிவுகளை நாம் நன்கு அறிவோம். ஏன், உலகத் தமிழர் அனைவருமே நன்கு அறிவர். ஆனால், அவரின் மெலிவுகளை அவர்தாம் அறிவார். அரசியலில் ஒருவரின் வலிவுகள் எவ்வளவு முகாமையானவையோ அவ்வளவு முகாமையானவை அவரின் மெலிவுகளும். ஒருவரின் பொதுவாழ்க்கையினது வெற்றிக்கும் தோல்விக்கும் இவ்வலிவுகளும் மெலிவுகளும் காரணங்களாக அமைகின்றன. 'ஒருவரின் பொதுவாழ்வு வானின்று இலங்கும் முழுநிலவைப் போன்றதாயின், அதிலுள்ள ஒளியைப் போன்றது அவரின் வலிவு; அதிலுள்ள கறையைப் போன்றது அவரின் மெலிவு.' என்பார் திருவள்ளுவர்-(957).

எஃது எவ்வாறாயினும், கலைஞரின் தமிழ்ப்பற்றையும், தமிழின மேம்பாட்டு நோக்கத்தையும் தமிழ்நாட்டு நலன்

நோக்கிய செயற்பாடுகளையும் எவரும் ஐயுறவோ, குறைகூறவோ முடியாது. இருப்பினும் இம்மூவகைச் செயற்பாடுகளையும் அவர் நெகிழ்ச்சியில்லாமல் மேற்கொள்ளவும் வினைமுடிக்கவும் வேண்டுமாயின். அவரின் வலிவுகளைவிட மெலிவுகளிலேயே மிக கவனமும் மிகு எச்சரிக்கையும் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் ஒருவரின் மெலிவுகள் அவரின் முழு வலிமையையும் மிகு துணிவையும் தகர்த்துவிடக் கூடியவை. கலைஞரின் மெலிவுகள் அவரின் வலிவுகளைக் குறைவு படுத்திவிடாமல் அவரைக் கோழையாக்கிவிடாமல் இருக்கவேண்டும் என்பதில் நாம் மிகு விருப்பம் கொள்கிறோம். அவ்வாறு நேர்ந்துவிடக்கூடாது என்றும் நாம் அவரை வேண்டிக் கொள்கிறோம்.

ஏனெனில் அவர்க்குக் கிடைத்த இவ்வாய்ப்பு, தமிழினத்துள் இன்றைய நிலையில் வேறு எவருக்கும் கிடைக்கமுடியாத அரிய வாய்ப்பாகும். எனவே, அவர் தமிழினத்தின் முன் இன்றைக்கிருக்கும் முகாமையான சில கடமைகளைச் செய்தே ஆகல்வேண்டும். அவற்றை வேறு எக்காரணம் கொண்டும் அவர் தவிர்த்துவிடவோ, கை நெகிழ்த்துவிடவோ கூடாது என்று நாம் அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். ‘செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க செய்யாமையானும் கெடும்’ என்னும் குறள் மொழி அவர்க்கு நன்றாகவே தெரிந்திருக்கும் அன்றோ?—

தமிழினத்தின் மேம்பாட்டுக்கென பல பணிகள்-கடமைகள்-செய்யப் பெறல்வேண்டும் என்பதையும், அவை எவை என்பதையும், வேறு யாரையும்விடக் கலைஞர் அவர்கள் நன்கு தேர்ந்து தெளிந்திருப்பார் என்று முழுமையாக நம்புகிறோம். எனினும் அவர் தம்முடைய மெலிவு கருதி இவற்றை முன்னெடுப்பதற்கு ஒருவேளை துணிவு கொள்ளமாட்டாரோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. அவர் அவ்வாறு துணியாமல் தொய்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாம் இதை முன்கூட்டியே எழுதவேண்டி வந்தது.

இன்றைய நிலையில் தமிழினத்துக்குச் செய்யவேண்டிய கட்டாயக் கடமைகளுள் கீழ்வரும் மூன்று பெரும் பணிகள் மிக மிக இன்றியமையாதனவாகும். ஒன்று, இந்தித்தடுப்பு, இரண்டு, தமிழீழ அமைப்பு, மூன்று தமிழின உணர்வு மீட்பு- ஆகியவை.

இவற்றை மேலோட்டமாகப் பார்க்கையில், ‘இவைதாம் இயல்பாக நடந்து வருகின்றனவே. இவற்றையே ஏன் நாம் இவ்வளவு அழுத்தமாகச் சொல்ல வேண்டும்’—என்று நினைக்கத் தோன்றும். ஆனால், ஆழமாக எண்ணிப் பார்க்கும் உண்மைத் தமிழர் எவரும், இவை நடந்து வருவதற்கான அடையாளத்தைக் கூட காண முடியாமல் உள்ளத்துக்குள்ளேயே பொருமிக் கொண்டிருப்பதை அறியலாம்.

ஆம்! இந்தி எதிர்ப்பு முயற்சிகள் நடந்தன. அவை கடந்த ஐம்பதாண்டுக் காலமாகவே தமிழகத்தில் நடந்து கொண்டுதாம் வருகின்றன. பெரியார் செய்யாத இந்தி எதிர்ப்புப் போராட்

டங்களா? அதன் பின்னரும் 1965 இல் வலிவான இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒன்று மாணவர்கள் சார்பில் நடத்தப் பெற்றதே! அதன் பின்னரும்கூட, அதையொட்டி எத்தனை மாநாடுகள்; கூட்டங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள்—தனிப்பட்ட கட்சி-கள் சார்பிலும். அனைத்துக் கட்சிகள் சார்பிலும், நடத்தப் பெற்-றன. ஆனாலும் இந்திக் கோட்டையை ஓர் இம்மியேனும் தகர்க்க முடிந்ததா? அதன் நுழைப்பு வேகத்தைத் தடுக்க முடிந்ததா? இன்றைக்கு அஃது எப்படிப்பட்ட அஞ்சத்தக்க பெரும்பூதமாக வளர்ந்து, இங்குள்ள வலிவு பெறாத தேசிய இனமக்களை எவ்வாறு மூளை மழுக்கமும், மெதுமெதுவாகக் கொல்லும் நஞ்சைப்போல உயிர் நலிவும் செய்து கொண்டு வருகிறது! மக்கள் வரிப் பணத்தி லேயே அஃது உயிர் வாழ்கிறது; உடல் கொழுக்கிறது; பிற இன மக்களைத் தன் தடிப்பமான. கொழுத்த கால்களை அழுத்தமாக ஊன்றி, அடிமைப்படச் செய்கிறது! இந்திரா, மிகக் கரவாகவும், இரக்கமற்ற அரக்கத் தனமாகவும் இந்திக்குச் செய்து வைத்த அடிப்படை ஆக்கச் செயல்களை யடுத்து, இராசீவின் கொடுங்கோன் கைகளால் அதற்கு வலிவான வழியமைத்துக் கொடுத்த பின், இந்தியரக்கி எல்லா மாநில மக்களையும் ஏறி மிதித்தன்றோ வெற்றி நடை போட்டு வருகிறாள். எனவே, இந்த நிலையில் நம் இந்தி யெதிர்ப்புக் கொள்கைகள் எங்கே? முயற்சிகள் எங்கே? போராட்-டங்கள் தாம் எங்கே? இவையெல்லாம் கலைஞர்க்குத் தெரியாத-னவா? அவர் உணராதனவா?

இனி, வெறும் இந்தி யெதிர்ப்பு உணர்வு, இன்றைக்குப் பயன்படாத வகையில்—அஃதாவது எதிர்த்தால் மட்டும் போதாது என்ற நிலையில்—தடுத்து நிறுத்த வேண்டும்—அல்லது அணை போட்டுத் தடுக்கவேண்டும் என்ற நிலையில்—இன்றைக்கு அது பெருகிப் பரந்து வலுப்பெற்றுத் தன் கொடிய இறக்கைகளை விரித்துக் கொண்டு, நம்மையெல்லாம் தன் வலிந்த கூரிய அலகால் கொத்திக் குதறவரும் பிணந்தின்னிக் கழுகைப்போல் படர்ந்து வருகிறது. இதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அதைத் தடுத்து நிறுத்தவில்லையானால், பின்னர் அஃது அடித்து விரட்டப்பட வேண்டிய அளவுக்கு வலிவு பெறப்போவதும் நாம் மெலிவு பெறப்போவதும் உறுதி, உறுதி! உறுதி! எனவேதான் இப்பொழுது இந்தியெதிர்ப்புணர்வு போதாது, இந்தித் தடுப்புணர்வு வேண்டும் என்று நாம் முதலில் குறிப்பிட்டோம். இதை நாம் செய்யாத வரை வல்லதிகார இராசீவும்,அவரை வணக்கி இயக்கிக் கொண்டிருக்கும் வடநாட்டு முதலாளியப் பார்ப்பனீயக் கூட்டமும், இந்தியை மேன்மேலும் தேசிய இனமக்கள்மேல் குறிப்பாகத் தமிழர்கள்மேல், திணிப்பது மட்டும் அன்று, உடலையே அறுத்து அரத்தத்தோடு அரத்தமாகக் கலக்கும்படி செய்து விடுவார்கள். அத்துணை அளவிலான எத்தர்கள், கொடுங்கோலர்கள், அரக்கர்கள், வல்லதிகாரக் கொடியவர்கள், அவர்கள்! இது, வெறுப்பினால் எழுதப் பெற்ற கருத்தன்று; எதிர்கால உண்மையை உற்றுநோக்கி எழுதப்பெற்ற கூற்றாகும்.

Scanned with CamScanner

அந்த அளவுக்கு இந்தியெனும் நச்சுக்கொடி நம்மேல் பரந்து படர்ந்து வருகிறது. அவ்வாறு படரவிட்டுள்ளது நடுவணரசு. வானொலியில் முன்னைவிட இந்தி மொழி முடுக்கி விடப் பெற்றுள்ளது; தொலைக்காட்சியிலோ சொல்லத் தேவையே இல்லை. மாநில நிகழ்ச்சிகளுக்கு முந்தியே மூன்றிலொரு பங்கு நேரமே ஒதுக்கப் பெற்றுள்ளது. அதிலும் சிலநேரம் சொல்லாமல் கொள்ளாமல் மாநில ஒளிபரப்பை நிறுத்திவிட்டு இந்தியரக்கி தன் கால்களை அகட்டிப்பரப்பிக் கொள்கிறாள். இந்தி பேசத் தெரிந்த முட்டாள்கள், மூடர்கள், கூத்தாடிகள், பம்பாய் சிவப்புவிளக்குக் காரிகைகள், அரையுடையும், அம்மணமுமாய் அடிக்கடி தொலைக் காட்சியில் தோன்றி அளப்பு அளப்பு என்று அலப்புகின்ற காட்சிகள் காதுகளைக் கனலச் செய்கின்றன; கண்களைச் சிவப்பாக்குகின்றன; நெஞ்சங்களைப் புண்ணாக்குகின்றன; உயிரைப் பற்றி எரியச் செய்கின்றன. என் செய்வது?

இராமாயணம் என்ன! மகாபாரதம் என்ன! குட்டி நாடகங்கள் என்ன! தொடர் நாடகங்கள் என்ன! சிறுகதைகள் என்ன! திரைப்படங்கள் என்ன! நாட்டியங்கள் என்ன! தெருக்கூத்துகள் என்ன! விளையாட்டுகள் என்ன! சிறுவர் சிறுமியர் கதைகள், மந்திர தந்திரக் கதைகள், ஆண், பெண் உளறல்கள், வம்பளப்புகள், செய்திகள், பாராளுமன்றப் பேத்தல்கள், தேர்தல் திறனாய்வுகள், உடற்பயிற்சிகள், ஓகங்கள், இருக்கைகள், கோமாளிக் கூத்துகள், விளம்பரங்கள் என்ற வகையில், தெருக் கடைகள், சந்தை சதுக்கங்கள், வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள், உந்துவண்டி நிலையங்கள், தொடர்வண்டி, வானூர்தி நிலையங்கள், விழாக்கள், வேடிக்கைகள், உழவாண்மைகள், மருத்துவமனைகள், படைத்துறைகள் இன்னோரன்ன பல்வகைக் காட்சிகளில் பல்வேறு கோணங்களில் பல்வேறு வகையான உரையாடல்கள், பாடல்கள், சொலவகங்கள், முதலிய பல்வேறு இலக்கிய, இசை, நாட்டிய, கலை, பண்பாட்டு உத்திகளில் இந்தி! இந்தி! இந்தி! பற்றும் பற்றாததற்கு இராசீவ் முகரையின் வாய்ப்பிளப்பு வேறு! வேங்கட இராமனின் இளித்த வாய்த்தனங்கள்! சோனியாவின் கோணல் நடைக் காட்சிகள் வேறு! இத்தகைய அனைத்துக் காட்சிகளையும் ஒருவன் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குப் பார்ப்பானானால் அவன் எத்தகைய தாய்மொழி நோன்பு நோற்பவனாக இருப்பினும் தானாகவே இந்தி அவன் செவிகளிலேறி, உணர்வில் ஏறி, மண்டையில் ஏறி, அவன் உயிரில் இரண்டறக் கலந்து விடுமளவிற்குக் கரவாக, முரட்டுத்தனமாக, சூழ்ச்சியாக, தேசியம் என்னும் பெயரில் ஒருமைப்பாடு என்னும் உணர்வில் வடமடயர்களால், இந்தி புயல் வேகத்தில், சூறாவளி அழுத்தத்தில் பரப்பப்பட்டு வருகிறது. இன்னும் அலுவலகங்கள், போக்குவரத்துகள், படைத்துறை, காவல்துறைகள் முதலியவற்றுள்ளும் இந்தி மேலும் மேலும் கொடியுயர்த்தி அரசாண்டு வருவதைத் தமிழ்(இன)க்கரவலர் என்று பெரும்பான்மைத் தமிழர்களால் புகழ்பாடப் பெறும் கலைஞர் அறிய மாட்டாரா? இதை விட்டு

Scanned with CamScanner

விட்டா சாராயக் கடைக்குள்ளும் உணவுப் பங்கீட்டுக் கடைகளுள்ளும் புகுந்து புகுந்து வந்து அரசியல் சித்துகள் விளையாட வேண்டும்? இன்றைய நிலையை நாம் பார்ப்பது அரசியல்! எதிர் கால நிலையை நாம் உணர்வது இனவியல்! இக்கால் கலைஞருக்குக் கிடைத்துள்ள அரசியல் வாய்ப்பை இனவியலுக்காகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நம் நோக்கம்! தவிர்க்க முடியாத தேவை!

இனி, இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழீழம் ஓர் இன்றியமையாத கொள்கை, நோக்கம்! தமிழீழம் இல்லாமல் இலங்கைத் தமிழர் வாழவே முடியாது. எத்தனை இராசீவாலும், இலங்கையிலுள்ள இந்தியப் படைவீரர்களாலும் விடுதலைப் போராளிகளுக்கும் சிங்களவர்களுக்கும் ஓர் ஒப்புரவை உண்டாக்கவே முடியாது. மற்றும், தமிழர்களிடத்தில் ஓர் அமைதியை உருவாக்கவே முடியாது. இது பற்றிக் கலைஞருக்கு மிக நன்றாகவே தெரியும். தமிழீழம் உருவாகாமல் போனால், அங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமன்று, தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் என்றும் உரிமை பற்றிப் பேசவே வாய்ப்பில்லாமல் போய்விடும்! அந்த உணர்வையே வடநாட்டு வல்லாண்மையர் அடக்கி ஒடுக்கி விடுவர்! பிறகு தமிழினமே சிறிது சிறிதாக அழிந்து பட்டுவிடும் என்பது அழித்தெழுத முடியாத உண்மையாக இருக்கும்.

எனவே, தமிழீழ அமைப்பு என்பதும் கலைஞர் போன்ற ஒருவர் காலத்தில்தான் நனவாகிட முடியும். அப்படிப்பட்ட ஒருவர் தமிழினத்தின் படிநிகராளியாகஇனி அரசியலுக்கு வரவே இயலாது; வந்தாலும் துணிவு பெற முடியாது; துணிவு பெற்றாலும் நிலைத்து நிற்க முடியாது. ஆகவே கலைஞர்தாம் இதையும் செய்து முடிக்க முடியும்.

இவ்விடத்தில் அண்மையில் கலைஞர் தமிழீழம் தொடர்பாகக் கையாண்ட ஓர் அணுகுமுறையைப் பற்றிச் சுட்டுவது தேவையாகிறது. தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினரும், தமிழின மேம்பாட்டு உணர்வில் வேறு யாருக்கும் தாழாத நெஞ்சினரும், இராசீவ் கும்பலையே பாராளுமன்றத்தில், தம் பேச்சு வன்மையாலும், துணிவாலும் மதிகலங்கச் செய்து, திணறடித்துக் கொண்டிருப்பவரும் ஆகிய நம் நன்மதிப்பிற்குரிய வை. கோபால்சாமி அவர்கள், சென்ற பிப்ரவரி இறுதியில் தமிழீழம் சென்று விடுதலை வேங்கை பிரபாகரனைச் சந்தித்து வந்ததைக் கலைஞர், நடுவணரசுக்காக, வெளிப்படையாகத் தகுதிக் குறைவாக மதிப்பிட்டிருக்கத் தேவையில்லை. 'வை. கோபால்சாமி கட்சிக் கட்டுப்பாட்டை மீறியும் தலைவரின் இசைவு பெறாமலும் தமிழீழம் சென்று வந்தது தவறு' என்ற கண்டிப்புடன் அந்த அறச்சிக்கலான (தர்ம சங்கடமான) நிகழ்ச்சியைப் பெருந்தன்மையுடன் விட்டிருக்கலாம், ஆனால், கலைஞர் தம் உணர்வெல்லையையும் தாண்டி, "வை. கோ. செய்தியாளரைச் சந்தித்துப் பேசியது தவறு" என்றும், "இந்த இலங்கைச் செலவு (பயணம்) தேவை

யற்றது, பயனற்றது'' என்றும், ''இவ்வாறு இலங்கை சென்று அவர் புதிய செய்தி எதுவும் கொண்டு வரவில்லைஎன்றும்'' அவர் கூறிய செய்திகள் முன்பே தெரிந்தவைதாம்'' என்றும், ''எனவே இதுபொறுப்பற்றசெயல்''என்றும், ''வெறும்விளம்பரத்துக்காகச் செய்தது'' என்றும் வை.கோ. மண்டையிலும் தமிழீழ ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் நெஞ்சிலும் அடித்தபடி சொல்லி. அவர் செயலுக்கு ஓர் ஊக்கக் குறைவையும், ஒரு மெலிவையும், தலைக் குனிவையும் ஏற்படுத்தியிருக்கத் தேவையில்லை. இதனால் நடுவணரசு வல்லதிகாரக்காரர்களிடமிருந்து தம் கண்டிப்புக்கு ஒரு மெச்சுதலையும் கலைஞர் எதிர்பார்த்திருப்பார் என்றாலும் அதுவும் பயனளித்து விட்டது என்று சொல்வதற்கும் இல்லை. இஃது ஒரு வகை அரசியல் தந்திரமான நடைமுறை என்று நாம் பெருமை கொள்வதற்கும் இல்லை என்பதைக் கலைஞர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழீழத்தைப் பொறுத்த வகையில் கலைஞர் எந்தக் கருத்தைக் கூறுவதானாலும், நடுவணரசுக்காகக் கூனுவதும், குறுகுவதும், குழைவதும் இனி மேலும் தேவையில்லை. வருவது வரட்டும் என்று தலை தூக்கியும், நெஞ்சை நிமிர்த்தியும் உரக்கச் சொல்லுதல் வேண்டும். சுற்றி வளைத்துப் பேச வேண்டிய தேவையும் அவர்க்கு வேண்டியதில்லை. தமிழின முன்னேற்றம் தொடர்பாகவோ, தமிழீழம், தமிழ்நாடு தொடர்பாகவோ, எந்தக் கருத்தையும், எந்தக் கொள்கையையும் தமக்குற்ற அரசியல் நலம் கருதி, எதற்காகவும், எவரிடத்தும், எந்தச் சூழ்நிலையிலும், தம்மை மறைத்துக்கொண்டோ, தாழ்த்திக் கொண்டோ கூற வேண்டியதில்லை. துணிவாகவும், வெளிப்படையாகவும் கூற வேண்டிய காலம் வந்து விட்டது என்பதைக் கலைஞர் எண்ணிக் கொள்ள வேண்டும்.

அடுத்து, முன்னர் கூறிய இவ்விரு விளைவுகளையும் நாம் உருவாக்க வேண்டுமானால், இன்றுள்ள தமிழர்களுக்குப் போதுமான இனவுணர்வை ஊட்டி அவர்களை நமக்குத் துணையாக்கிக் கொள்ள வேண்டும். கல்வித்துறை, வாழ்வியல், செய்தித்தாள் முதலிய முகாமையான அனைத்து நிலைகளிலும் தமிழினவுணர்வை நம் மக்களுக்கு நாம் ஊட்டியாகல் வேண்டும்.

பாரதியாரைத் தலைமேல் வைத்து ஆரியம் கூத்தாடுவதைப் போல், பாரதிதாசனை—அவரின் இனவுணர்வுப் பாடல்களை நாம் பரப்பியாகல் வேண்டும். அத்துடன் நம் தென்மொழிப் பாடல்களை மக்கள் தவறாமல் படித்தறிவதற்கான வழிவகைகள் செய்யப் பெறுதல் வேண்டும். இது நம் இதழைப் பரப்புவதற்கு நாம் கூறும் மறைமுகமான—கரவான வழியென்று கருதிக் கொள்ளாமல்—உண்மையிலேயே இனமானவுணர்வுள்ள கருத்துகளைப் பரப்புவதற்கு நாம் கூறும் எளிய வழியாகக் கருதிக் கொள்ளுதல் வேண்டும். நமக்கு என்றுமே பொருளியல் நாட்டமோ, புகழ் நோக்கமோ, பதவி எண்ணமோ இருந்ததில்லை என்பதை நம் அன்புக்குரிய கலைஞர்க்கு நாம் சொல்ல வேண்டுவதில்லை என்று

நாம் கருதுகிறோம். எனவே, நாம் என்ன சொன்னாலும் எதைச் செய்தாலும், அவை எல்லாவற்றிலும் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாட்டு உரிமை ஆகிய முக்கூறுகளே—அவற்றின் நலவுணர்வுகளே—முழுமையாகப் படர்ந்திருக்கும் என்பதை அவர் புதிதாக அறிய வேண்டுவதில்லை. கடந்த முப்பதாண்டுகளாகவே அவர் நம்மை நன்கு அறிந்தவர்; நாமும் அவரை நன்கு தெளிந்துள்ளோம். ஆகவே தென்மொழி பரப்பி வரும் உணர்வுகளும் கருத்துகளும் அவருக்கும் அவர் கருத்துகளுக்கும் ஊட்டமளிப்பவை; உயிர் அளிப்பவை என்பதில் அவருக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியா.

தென்மொழியைத் தொடக்கத்திலேயே கலைஞர் வளரவிடவில்லை என்பதை மிக்க வருத்தத்துடன், இக்கால் அவருக்கு நினைவூட்டிக் கொள்கிறோம். அவரும் அவரது கட்சியும் ஆட்சிக்கு வந்தவுடனேயே, பக்தவத்சலம் காலத்தில் தமிழகத்தின் அனைத்து நூலகங்களுக்கும் போய்க் கொண்டிருந்த தென்மொழி, அரசின் பொருள் முட்டுப்பாடு என்னும் காரணம் காட்டி நிறுத்தப் பெற்றது. அஃது எத்துணை அவலமான நிலை! அன்று தென்மொழியைக் கலைஞர் நிறுத்தாமலிருந்தால், இன்று அவ்விதழ்க் கருத்துகளின் பரவல், அவர்க்கு எத்துணை வலிவை—அரணை—காவலை உண்டாக்கியிருக்கும்! அவர் செய்யவிருக்கும் பணிகளுக்கு எவ்வளவு துணையாகப் பெரும் படைகளை உருவாக்கியிருக்கும் என்பதைக் கலைஞர் தம் விருப்பு வெறுப்புகளையெல்லாம் தவிர்த்துவிட்டு, ஒரு கணநேரம், கண்களை மூடிக் கொண்டு, சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஒருவேளை நம் படையோ அல்லது துணையோ தமக்குத் தேவையில்லை, என்று கூட கலைஞர் நினைத்திருக்கலாம். அஃது அவ்வாறிருந்தால் நாம் கலைஞர் நிலைக்கும், நினைவுக்கும் இரங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இறுதியாக, எப்படியோ வெயில் புழுதிக்காய்ச்சலாகவாவது அடிக்க வேண்டும் என்பதே, இக்கால் உள்ள நிலை, ஆனால், பனிக்கட்டிக்கும் பற்றாத வெயில் என்பதாக நிலையிருக்குமானால் நாம் என்ன செய்வது? எழுஞாயிறு விழுஞாயிறாக இருப்பதே மேல் என்று கருத வேண்டியதுதான். அந்த நிலைக்குக் கலைஞர் தமிழினத்தையும் தமிழ்நாட்டையும் 'அம்போ' என்று விட்டு விடமாட்டார் என்றே நம்புகிறோம்! நம் நம்பிக்கையின் வெற்றி, கலைஞர் நம் மேல் வைக்கும் நம்பிக்கையைப் பொறுத்தது; அதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

"தென்மொழி" சென்னை-5.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 24.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 12.00

ஓரிதழுக்கு உருபா 4.00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

இதோ நீங்கள் கேட்ட தொகை!
இதழைத் தொடர்ந்து நடத்துங்கள்!

5. சொல்லுக்கு பத்து என்ன? இதோ இருபது!

பத்தென்ன! இதோ இருபது. தென்மொழி தொடரட்டும்
— வி. பால்ச்சாமி, வீரபாண்டி, (மதுரை)

(இவரெழுதிய 5 சொற்களுக்கும் சொல்லுக்கு உரு 20/- மேனி, வரப்பெற்ற தொகை உரு 100/-)

6. எங்கள் துணை என்றும் தொடரும்!

அறிக்கையைப் படித்த பெரம்பூரைச் சார்ந்த பெரியார் தொண்டுள்ளம் ஒன்று தம் குடும்பத்தினர் சார்பாக ஆசிரியரை நேரில் வந்து கண்டு, அவர் பணிக்குத் தாங்கள் என்றுமே துணை நிற்பதாக உறுதி கூறி, அன்பளிப்பாகக் கொடுத்த வரவு உரு 100/-

7. மனத்திற்குத் துன்பம்!

நற்றமிழ் நலம் பெறுப் நல்லீர்! நனி வணக்கம்... 23-11-88-ஆம் நாள் தங்களுடன் மனம் விட்டுக் கலந்து பேசவே வந்தேன்; இயலவில்லை. தாங்கள் கூறிய செய்திகள் மனத்திற்குத் துன்பமாக இருந்தன. மனக்கலக்கத்துடன் பலவாறு எண்ணிக் கொண்டே இரவு 10-30 மணிக்கு இல்லம் வந்து சேர்ந்தேன்; என்னால் இயன்ற தொகை உரு. 100/- மட்டும் இன்று பணவிடை அஞ்சல் செய்துள்ளேன்; ஏற்றுக் கொள்ளவேண்டுகின்றேன்.
தங்கள் அன்பு; —வ. வேம்பையன்: கல்பாக்கம்

8. என்னால் இயன்றவரை!

ஐயா; வணக்கம் உரு 27-50 அன்பளிப்பாக அனுப்பியுள்ளேன், என்னால் இயன்றவரை;
—ஒடவை. தமிழ்வேந்தன், ஒட்டன்சத்திரம்

9.	தமிழநம்பி, விழுப்புரம்:	100-00
10.	பிரான்சிசு, இந்திரா நகர், சென்னை	500-00
11.	ஓர் அன்பர், அசோக் இலேலண்டு. சென்னை	20-00
12.	ஓர் அன்பர், ஆதம்பாக்கம். சென்னை-88	100-00

13. நிலைப்பட வேண்டுவ செய்ய வேண்டும்!

பெருந்தகையீர், வணக்கம்;

தங்கள் தமிழ்நெஞ்சம் விடுத்த துன்பக் காட்சி கண்டேன்; இற்றைக்குத் தங்களைத் தவிர்த்துத் தனித்தமிழ்ப் பணி செய்வார் எவருமிலர். ஆதலின் தடை பல வரினும் தாங்கள் தென்மொழி, தமிழ்நிலம் நிலைப்பட வேண்டுவ செய்ய வேண்டும்; என்றும் துணை நிற்போம். இது முதல் தவணை; தங்கள் அன்பன்,
பேரா. கோ. அரங்கச்செல்வன், கோபி

(அன்பளிப்பு வரவு: உரு 300-00

Scanned with CamScanner

14. என்றும் துணை நிற்பேன்!

தமிழ்நலம் சான்றீர்!

வணக்கம். தென்மொழி, தமிழ்நிலம், தொடர்ந்து வரவேண்டும். தங்களின் பணிக்கு என்றும் துணை நிற்பேன். முதல் தவணையாக உரு. 300/- (முன்னூறு மட்டும் விடுத்துள்ளேன்.) என்றும் அன்புடன். —மா. அரசு, அளுக்குளி.

(அன்பளிப்பு வரவு: உரு, 300-00)

15. தமிழர்கள் உதவுவார்கள் என்று நம்பிக்கை எனக்கு இல்லை!

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்கட்கு,

வணக்கம் பல... தென்மொழி இதழுக்கு நன்கொடையாக உரு 250/- ஐ வரவு வைத்துக் கொள்ள வேண்டுகிறேன். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம், ஆகிய இதழ்களை நிறுத்துவது பற்றிய அறிவிப்பு எனக்கு வருத்தத்தைத் தந்தது. ஆயின், தாங்கள் குறிப்பிட்டுள்ள கரணியங்களைக் களைவது முடியக் கூடியதாக எனக்குப் படவில்லை. தமிழர்கள் உங்கட்கு உதவுவார்களென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இருப்பினும் என்னால் இயன்ற தொகை (உரு 250/-) அனுப்பியுள்ளேன்...

...நான் குடியிருக்கும் வீட்டை இடித்துவிட்டுப் புதிதாக வீடு கட்டும் பணியில் மூழ்கியுள்ளேன். அரசு கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற முயன்று வருகிறேன். எனவேதான் நன்கொடையை மிகுதியாக அனுப்ப இயலவில்லை. அன்பன்.

—கா. இளமுருகன், பு. புளியம்பட்டி

16. நிலா கோபி 1000-00

17. தமிழப்பன், திருப்பூர். 500-00

18. தங்கள் தமிழ்ப்பணி என் உயிர்!

மேதகு. பாவலரேறு ஐயா அவர்கட்கு,

பணிவான வணக்கங்கள் பல... இதழின் வளர்ச்சிக்கு இது பயன்படட்டும். தங்கள் தமிழ்ப்பணியை உயிராக நினைக்கும் தூயவன், புலவர். மு. அரசமாணிக்கனார். ஈரோடு-1

(அன்பளிப்பு— உரு 1000/-)

19. தமிழற்ற நாடு தலையற்றமுண்டம்!

அன்பார்ந்த ஐயா,

'தமிழற்ற நாடு தலையற்றமுண்டம்' என்றார் பாவேந்தர். தென்மொழி, தமிழ்ச்சிட்டு தமிழ்நிலம் அற்ற நாடும் அத்தகையதே! ஆகவே காப்போம் தென்மொழி! மீட்போம், தமிழ்நாடு!

—தமிழ்மாறன், அம்மன்புரம்

(அன்பளிப்பு வரவு : உரு. 50-00)

20. இதழை நிறுத்தவேண்டாம்!

புதுக்கோட்டையிலிருந்து விரைந்து ஐயாயிரம் உருபா

வெல்வோம்

மரக்கிளையில் கட்டி வைத்த
போர்முரசில் கிளைகள் மோத
எழும் முரசொலி கேட்டுப்
போர்வந்த தென்று பூரித்ததோள்
மறவர்களே, நீங்களெல்லாம்
எங்குப் போனீர்!
தமிழரென இங்கு வாழ்வோர்
அடிபிடி என்ற கூச்சல்
வீதியிலே எழுந்தால் போதும்
தலைதெறிக்க ஓடுகின்றார்—
பனையோலை சரசரப்பைப்
பேயிரைச்சல் என்றஞ்சிக்
குலைநடுங்குகின்றார்—
அஞ்சிக் கிடக்கவும்
அடங்கிப் போகவும்
அறநூல்கள் ஓதுமாயின்
அவைநல்ல நூல்கள் அல்ல;
கொஞ்சுதமிழ் மழலை மக்கள்
கொடிபிடித்து போர்நடை பழகி
விஞ்சுபுகழ் தமிழ்மரபைத்
தன்மான வழிமுறையைப்
புதுப்பித்துப் பொலிவு பெற்று
வாழ்வதெனச் சூளுரைத்து
வெல்வோம்—வெல்வோம்!

—பறம்பை அறிவன்

(முன் பக்கத் தொடர்ச்சி)
விடுப்போம், இதனை நிறுத்தவேண்டாம் என வேண்டுகிறோம்;
—இரா. இராமதாசன் மற்றும் தனித்தமிழ் அன்பர்கள்
(அன்பளிப்பு உரு 150/-) புதுக்கோட்டை

21. திருவாணன், அசோக்லேலண்டு 150-00
22. தமிழ்வேந்தன். எண்ணூர் சென்னை-57 10-00
23. கா: இளமுருகன், புளியம்பட்டி
(இரண்டாம் முறை வரவு) 50-00

24. தென்மொழி என் கண்விழி!
அதனை இழப்பதா? கூடாது!

வணக்கத்திற்குரிய அய்யா,

வணக்கம். காலந்தாழ்ந்து அனுப்பும் இச்சிறிய அன்பளிப்பினை ஏற்றுப் பொறுத்தருள்க. உங்களது தந்நலங் கருதாத் தூய பணி தொடரும்! அறியாமை இருள் நீங்கும்!... தென்மொழி எமது கண்விழி! அதனை இழப்பதா? கூடாது! தொடரட்டும்; வெல்க தூய பணி!

—'உமாபதி', காரைக்குடி-2

(இவர் வழி அன்பளிப்பு வரவு: உரு: 130-00)
(இதுவரை வரப்பெற்ற மொத்த வரவு: உரு: 7246-00)
(அடுத்த இதழில், இதழ்கள் தொடர்பான இறுதி அறிக்கை வெளிவரும்.)

Scanned with CamScanner



நூல் : பெரியாரும் சமதர்மமும்: ஆசிரியர் நெ. து. சுந்தர வடிவேலு, வெளியீடு: புதுவாழ்வுப் பதிப்பகம், 23, நான்காவது முதன்மைச்சாலை, கத்தூரிபா நகர் அடையாறு சென்னை-600 020 பக்கம் 196+12 விலை ரூ. 25/-

இந்தியாவின் புரட்சி விடிவெள்ளி பகத்சிங், இராசகுரு, சுகதேவ் மூவரும் தூக்கில் தொங்க உடந்தையாய் இருந்தவர் தேசத்தந்தை. பகத்சிங்கைப் போற்றிப் பரணி பாடிய ஈ. வே. ரா வெள்ளையர் கையாள்!

பொதுவுடைமை நிலைப்பாட்டை நொறுக்கிக் குடியேற்றச் சந்தைகளைக் கைப்பற்ற முயன்ற நாசிச, பாசிசப் பாசறையை எதிர்த்து, உருசியா உள்ளிட்ட நேச நாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவு நல்கிய ஈ. வே. ரா. வெள்ளையர் கையாள்! அந்த இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனுக்குத் தொடக்கத்தில் ஆதரவு அளித்து, பின் நாசிச பாசிசப் பாசறையின் வியக்கத் தக்க வெற்றியையும் பிரிட்டனின் படுதோல்வியையும் கண்டவுடன் 'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கி, பின் நேச நாடுகள் வெற்றியை மீட்டெடுக்கத் தொடங்கிய பின் பிரிட்டனுக்குத் தாளம்போட்ட இயக்கமும் தலைவரும் இந்திய விடிவெள்ளிகள்!

நிகரமைப்புரட்சி உலகில் முதலாவதாய் நடக்கத்தோதான சூழ்நிலை நிலவியது இந்தியாவில் தான் என்ற கணிப்பை மாற்றிப் புரட்சி உணர்வை முனைமழுக்கி ஐம்பதாண்டுகளாய் நிகரமை பேசிக் கொண்டே இருக்கும். இயக்கமும் தலைமையும் தேசநேயர்கள்! பொதுவுடைமைக் கருத்துகளைத் தொடர்ந்து வெளியிட்டதற்காகத் தாமும் தமது தங்கை கண்ணம்மாவும் தண்டனைக்கு உட்பட்ட ஈ. வே. ரா. நாட்டு எதிர்ப்பாளர்!

எந்த மக்களுக்கு அமைதியை இறக்குமதி செய்யச் சென்றார்களோ, அந்த ஏதுமறியாப் பொதுமக்கள் மூவாயிரவரைக் கொலை செய்து அமைதிப்படுத்தியவர்களை அறிந்த நாம், உலகைக் குலுக்கிய அக்டோபர் புரட்சியின் 10 நாளில் மட்டும் கொல்லப் பட்டோர் 9 பேர் என்பதை அறிய வியக்கிறோம்;

பொதுமைக் கொள்கைகளை வலியுறுத்திப் புரட்சி உருசியாவைத் தமிழருக்கு அறிமுகப்படுத்தி அந்த நடைமுறையைக் கைக்கொள்ள மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர் பெரியாரே!

உருவாக்கும் பொருள் குமுகத்துக்கே (பக். 82); மிகுதிப் பொருள் பகிர்வை- வழங்கலைத் தீர்மானிப்பவர் உருவாக்கு பவர்களே (பக் 89) என்ற பொதுமைக் கோட்பாட்டின் உயிர்க் கருத்தைப் பரப்பியவர் பெரியாரே. 1933-இலேயே மே நாளைக் கொண்டாடச் செய்தவரும் அவரே!

ஆளும் கும்பல் காவல்துறை, சிறை, வழக்கு மன்றம் பொது மக்களுக்கு எதிரி என்பதையும் அத்தகைய ஆட்சியை வீழ்த்தி, சொத்தைக் குமுக உடைமையாக்கத் துமுக்கியை ஏந்துவது எப்படி இன்றியமையாதது (ப. 75-76) என விளக்கினார் பெரியார்.

'எல்லோர்க்கும் எல்லாம் சமம்; எல்லாம் பொது' என முழங்கி, 'சொத்து என்பதே பலவகைத் தகாத செயல்களுக்குக் கொடுக்கப்படும் கையூட்டு' என வரையறுத்துப் பிறவி முதலாளியம், பிறவிப் பாட்டாளியம் உள்ள நாட்டில் தாழ்த்தப் பட்டோர் எல்லாரும் பாட்டாளிகளே எனப் பெரியாரின் சொற்களில் விளக்குகிறது, இந்நூல்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையையும் கைப்பற்றிய உழைத்தறியாப் போலிப் பொதுவுடைமையர் பொது மக்களுக்கு இரண்டகம் (ப. 176) செய்ததையும் உய்த்துணர்ந்து எரிச்சல் அடைகிறோம்.

பொதுமையை நிலைநிறுத்தப் போராடிய பெரியார் எப்படித் திசை திருப்பப்பட்டார், வட-தென் இந்தியர் பிளவு படக் காரணம், பொதுமையை நிலை நாட்டப் பாட்டாளிப் பிரிவினம் கையில் எடுக்க வேண்டிய கருவிப் போராட்டத்தைப் பெரியார் நடைமுறையில் வலியுறுத்தாமை போன்ற காரணங்கள் பெரியாரின் பொதுமைக் கோட்பாட்டுக்குக் கடுஞ்சறுக்கல்களாக அமைந்தன எனக் குறிப்பால் உணர்த்துகிறார் ஆசிரியர்.

குமுகாய மாற்றத்துக்கான கல்வியை உறுதிப்படுத்தாவிடில் மாற்றம் நிலைக்காது என்ற இலெனின் கொள்கையையே ஈ. வெ. ரா. கொண்டிருந்தார் என்னும் நூலாசிரியர் 'தமிழகத்தின் கல்வி விரிவாக்கத்துக்கு மிகவும் உழைத்த தனித் தன்மை மிக்க ஒரே பொதுக் கல்வி இயக்குநர் ஆக விளங்கிய திரு. நெ. து. சுந்தரவடிவேலர்.

தமிழர் தந்தை பெரியாரும் பொதுமையும் பற்றி அரிய செய்திகளைத் தாங்கிய இந்த நூல் தமிழர் ஒவ்வொருவரும் படித்து, வரலாற்றை அறிந்து, சறுக்கல்களை உணர்ந்து பொதுமைக் குமுகாயத்தை அமைக்க உறுதி பெற உதவும் கருத்துப் பெட்டகம்.

—பேரா. இல. க. இரத்தினவேல்

Scanned with CamScanner

தமிழ்நாட்டில் மொழிச்சிக்கல்...!
நம் உரிமையும் கடமையும்

- பறம்பை அறிவன் -

''தமிழ்நாட்டில் தமிழ்தான்'' என்பதைப் புரிந்துக் கொள்ள முடியும்: தமிழ்நாட்டில் தமிழறிந்தவர்தாம் முதலமைச்சர் ஆதல்வேண்டும் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், தமிழ் நாட்டில் தமிழன்தான் முதலமைச்சன் ஆதல்வேண்டும் என்பது ஒரு சிக்கலான விருப்பமாகவுள்ளது. ஏன்?

'தமிழன்' என்பது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரை மட்டுமே குறிக்கும். தமிழ் நாட்டிலோ, சிறுபான்மையாகத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சௌராட்டிரம், உருது, இந்தி, மராட்டியம் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களும் அரசியல் சட்டப்படி 'முதல்வர்' ஆக உரிமையுடையவர்களே: ஆனாலும், இச்சிறுபான்மையர் தங்கள் 'வீட்டுமொழி'யால் அல்லாமல் தமிழ்மொழியாலேயே வாழ்கின்றனர். எனவே. இவர்களும் 'தமிழரே' ஆவர், மேலும், தந்தை பெரியாரை ஏற்றுக் கொண்ட தமிழகம் ஏன் மற்றவரை ஏற்றுக்கொள்ளக்கூடாது? அவர்க்குத் தமிழர்மேல் இருந்த கரிசனம் இருந்தால் போதும், தமிழினத்திற்குள்—தமிழ்நாட்டுக்குள் நாம் 'தமிழன்' என்ற தனிமுத்திரை குத்தவேண்டியிராது:

கொள்கையளவில் நாம் 'தமிழன்' என்பதற்கு விரிவான பொருள் கொண்டிருக்கிறோம். நடைமுறையில் தமிழன் வேண்டும்; அவன் தமிழ்நாட்டு நலனில் உண்மையான அக்கறை கொண்டிருத்தலே போதுமானது.

தமிழன் என்றவுணர்ச்சி தட்டுக்கெட்டுக் கிடக்கின்ற இப்போது அதற்கான அளவுகோலாகத் 'தமிழன்' என்ற பிறப்பு மட்டும் போதாது. ஏனெனில் 'தமிழன்' என்றவுணர்ச்சியை 'இந்தியன்' என்ற போலியுணர்ச்சிக்குள் சிறைப்படுத்தி வைத்துள்ளோம்!

மொழிச் சிக்கலை ஓர் அரசியல் சிக்கலாகத்தான் பார்த்தல் வேண்டும். அதனை வெறும் மொழிச் சிக்கல் எனப் புறந்தள்ளி விடுதல் இயலாது: அரசியல் கட்சிகள் ஒப்போலை(வாக்கு)ச் சீட்டு வேட்டையில் இறங்கும்போது, தமிழ்மொழிக்குச் சிறப்பளிப்போம் என்றும், இந்தி வல்லாண்மையைத் தகர்ப்போம் என்றும், ஆங்கிலம் இங்கே நீடிக்கும் என்றும், இவற்றையெல்லாம் மறுத்தும் எதிர்த்தும் முழக்கங்கள் எழுவதை அறிந்தோம்; இத்தகு நிலைமைகள் மொழிக்கு ஓர் அரசியல் இடம் இருப்பதையே உறுதி செய்கின்றன எனலாம்!

''கடலைத் தாண்டினேன்;
மொழியை இழந்தேன்!
புதிய ஆற்றலைப்
புதிய மொழியைக் கற்றேன்.''

Scanned with CamScanner

கியூபெக்கில் மொழிப்போர்!

கனடாவில் பிரஞ்சு மொழி பேசப்படும் ஒரு சிறு பகுதியே கியூபெக். கடந்த 25 ஆண்டுகளில் இப்பகுதி நான்கு முறை மொழிப்போராட்டத்தைச் சந்தித்துள்ளது.

1977-இல் கியூபெக் கட்சி ஆட்சியேற்ற போது, அக்கட்சி 1011 ஆவது அரசியல் சட்டப்பிரிவின்படி கல்வித்துறை அற,(நீதி)த்துறை, ஆட்சித்துறை, வணிகத்துறை முதலிய துறைகளில் பிரெஞ்சு மொழி மட்டுமே பயன்படுத்தப்படும் என்று அறிவித்தாலும், பிறமொழியாளரான சிறு வணிகர்களுக்கு நெறி (விதி) விலக்கையும் நடைமுறைப்படுத்தியது.

1985-இல் 'லிபரல் கட்சி' ஆட்சி ஏற்றபோது அதன் தலைமையமைச்சர் இராபர்ட் புராசா பிரெஞ்சு மொழியை மட்டுமே கொண்ட ஒரு மொழித்திட்டத்தை நடைமுறைப்படுத்தினர். சுவரொட்டிகளிலும் பெயர்ப் பலகைகளிலும் ஆங்கிலம் அனுமதிக்கப்படவில்லை.

தாக்கத்துக்குள்ளாகிய ஆங்கில வணிகர்கள் உயர்நெறி மன்றத்திற்கு முறையீடு செய்தபோது, ''வணிகச் சுவரொட்டிகளிலும், பெயர்ப்பலகைகளிலும் பிரஞ்சு முதலிடம் பெறவேண்டுமே தவிர பிரெஞ்சு மட்டுமே இடம் பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை'' என்று உயர்நெறி மன்றம் தீர்ப்பளித்து ஆங்கில வணிகர்களை மகிழ்வித்தது. ஆனல் அம்மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

''பிரஞ்சு முதலிடம் பெறும் இருமொழித்திட்டத்தை வணிகர்கள் தங்கள் கடைகளுக்குள் பயன்படுத்தலாமேயன்றிக் கடைகளுக்கு வெளியில் பிரெஞ்சு மட்டுமே இடம் பெறும்'' என்று இருமொழியாளரையும் நிறைவு செய்யும் வகையில் தலைமையமைச்சர் புராசா அளித்த தீர்ப்பே காரணமாகும். தலைமையமைச்சர் எதிர்பார்த்தது நிகழவில்லை. 15000-க்கும் மேற்பட்ட கியூபெக் கட்சியினர் மாந்திரேயில் ஒன்று திரண்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அவர்கள், ''ஒரு மொழி அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராத பிறரின் தீர்ப்புக்கு உள்ளாவது முறையன்று'' என்று தெரிவித்துள்ள பாவலர் காசுடன் மிரான் குறிப்பிடத்தக்கவர்.

பிரெஞ்சுக்கு முதலிடத்தையும் ஆங்கிலத்துக்கு இரண்டாம் இடத்தையும் அளிக்கும் இவ்விருமொழித் திட்டம் நாளடைவில் பிரெஞ்சு மொழித் தேய்வுக்கும் ஆங்கில வல்லாண்மைக்கும் இடமளிக்கும் என்பது கியூபெக் மக்களின் கருத்தாகும்.

அடிப்படை: செ. மோந்த், இந்து நாளிதழ்: 5-2-1989
மொழி பெயர்ப்பு: டி. சாந்தி (மெய். மு., ஆய்வாளர்)

(முன் பக்கத் தொடர்ச்சி)
என்று நம் தாய்மொழி உணர்ச்சிக்குரிய ஆற்றலை மீட்டுக் கொள்ளுவோம். ஏனெனில், கோழியின் குஞ்சு, புலியின் போத்தென என்மொழி எனக்குள் இளமையோடு வீறுடன் தோன்றிப் பிறந்திருப்பதை என்னல் உணரமுடிகிறது.

தென்மொழிப் பணியாளர்களுக்கு அருள்மணியின் வேண்டுகோள் !

தென்மொழியில் பணியாற்றும் அன்புள்ளங்களுக்கு, இம்மடல் 'தென்மொழியில் பணிபுரியும் அத்தனை அன்புள்ளங்களுக்கும் எழுதுவதாகும்.

உங்கள் அனைவரையும் கண்டு நான் உண்மையிலேயே பொறுமைப்படுகிறேன். ஏன்? உலகத்திலேயே தலை சிறந்த ஓர் அறிஞரை—புலவரை—மெய்ம்மையாளரை—'ஞானி'யை நீங்கள் கண்டும் உரையைக் கொண்டும் உளம் களிக்கின்றீர்கள், அதனால்! எனக்கு அப்பெறற்கரிய 'பேறு' கிடைக்கவில்லையே என்று எண்ணி ஏங்கி உளம் நைந்து போகிறேன் என்பதால்.

இந்த உலகில் சிறிது நடந்தால் நல்ல காற்று பெறலாம்; நிழலும் பெறலாம்; கனி, உணவும் பெறலாம். உழைத்தால் பொருளும் பெறலாம். எல்லாம் முயன்றால் எளிதில் பெறலாம். ஆனால் ஒன்றை மட்டும் பெறுதல் அவ்வளவு எளிதன்று! நல்ல அறிவு. இனி, அதையும்கூட பணம் தந்தால் நல்ல பொத்தகங்களைக் கொண்டு பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அதனினும் அரியது ஒன்று உண்டு. அந்த அறிவுச் செல்வத்தை அளிக்கும் ஆசானைக் காண்பதே! கண்டு கொண்டு இருப்பதுதான்! உண்மையில் உணர்கிறேன்! விண்ணில் சென்றாலும் காண்பது அரிது! அரிது! அரிது!

'கற்பனை ஊற்று' படித்தேன். அரிய மாணிக்க நூல் அது! இந்த நாட்டு மக்கள் மாடுகள் அல்ல! மலந்தின்னும் பன்றிகள்! இருப்பில் உள்ள 'கற்பனை ஊற்'றெல்லாம் வற்றிப்போகும் அளவுக்கு விற்றுப்போயிருக்க வேண்டும், அறிவின் மேல் துளியேனும் அக்கறையிருந்தால், இந்த நாட்டு மக்களுக்கு!

உங்கள் கால்களைத் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்; 'ஐயா' அவர்களுக்கு என்றும் துணையிருங்கள்! நான் மட்டும் அங்கு இருந்திருந்தால்...! அந்த இனிய பெருமை பொருந்திய நாள் என்று வரும்? நிலவில் குலவும் காலம் அது!

அன்பு—அருள்மணி, பெங்களூர்-46

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19-ஆ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்	:	சென்னை
2. காலமுறை	:	மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர்	:	திருவாட்டி. மா. தாமரை
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
4. வெளியிடுவோர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி	:	சென்னை-5
ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலிடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்		திரு பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

சலுகை விலையில்

50 இதழ்கள் கொண்ட

தென்மொழி: 15-00

தமிழ்ச்சிட்டு 7-50

(அஞ்சல் செலவு உட்பட)
உடனே எழுதுங்கள்.

தென்மொழி, சென்னை - 5

பெருஞ்சித்திரனர் நேருரைகள்.

இப்படி இருக்கிறபோது அறிவு முன்னேற்றத்திற்கு உண்மையாகவே அடிப்படைத் தேவையாக இருக்கின்ற அந்தக் கல்வி வளர்ச்சியிலும், தன்மான வளர்ச்சியிலும். பகுத்தறிவு வளர்ச்சியிலும் இந்த இனத்தினுடைய உண்மையான அறிவு ஊற்றுக் கண்ணைத் திறந்து விட்டவர் ''தந்தை பெரியார்தாம்''. இதிலே அவருடைய தொண்டு நமக்குத் தேவையா, தேவையில்லையா என்று நினைப்பதற்கு நமக்கு என்ன தகுதி இருக்கிறது. உண்மையாகக் கிட்டற்கரிய அவருடைய தொண்டு இந்த இனத்தின் அடிப்படைகளை நிறைவு செய்தன. இனி, அது மேற்கொண்டு வளர்க்கப்பட வேண்டும்.

அவர் ஒரு தலைமைப் பேராசான். அந்தப் பேராசான் கற்றுக் கொடுத்து விட்டுப், போயிருக்கிற பாடங்களை எதிர்காலத் தமிழர்கள் உண்மையாகவே ஆழ்ந்து கற்று, அதற்கு மேன்மேலும் பல வகையாக இந்த இனத்திற்கு வழிகளை அமைத்துக் கொடுத்தால், நூறு, இருநூறு ஆண்டுகளிலே இந்த இனம் இப்போதிருக்கின்ற அடிமை நிலைகளை விட்டு மீண்டு, மற்ற பேரினங்களுக்குச் சமமாக வளர்ச்சி பெற வாய்ப்பு உண்டு. அந்த நிலைக்கு ஒரு பேராசானக, தலைவராக; பெரியாரை அனைவரும் கருதிக்கொள்ள வேண்டும்.

இதில் எந்தவகையான கருத்து வேறு பாட்டுக்கும் வகையே இல்லை. இதுதான் என்னுடைய கருத்து.

நேருரை கண்டவர்: பார்ப்பனர்களுடைய இன்றைய போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் திருந்தி விட்டார்கள் என்று கூறப்படும் கருத்தில் உண்மை இருக்கிறதா?

பாவலரேறு:— அய்யா! கடந்த சில காலங்களிலே தென்மொழியிலே நான் பார்ப்பனர்களைப்பற்றித் தெளிவான கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கிறேன். ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பார்ப்பனர்களிடத்திலே எனக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு வெறுப்புணர்ச்சி என்று கூடச் சொல்லலாம். ஏன் அவ்வாறு தோன்றியது என்பதைச் சொல்கிறேன்;

நான் சிறுவனக இருந்ததிலிருந்தே எனக்குப் பார்ப்பனர்களிடத்தே ஒருவெறுப்பு இருந்தது. ஏனென்று சொன்னல் நான் தொடக்க நிலைப் பள்ளியிலே படித்தகாலத்திலே கூட எனக்கு வாய்த்த ஆசிரியர்கள் பார்ப்பன ஆசிரியர்கள். அவர்கள் அந்தக் காலத்திலேயே 'சூத்திர' மாணவர்களைப் பெரும்பாலும் விரும்ப மாட்டார்கள். அந்தப் பார்ப்பனப் பையன்களுக்குத்தான் கல்வியை விருப்போடு கற்றுக் கொடுப்பார்கள்.

நாங்களெல்லாம் எழுந்து ஏதாவது ஐயம் கேட்டால் சொல்ல மாட்டார்கள்; 'உட்காரடா' என்று சொல்லி விடு

வார்கள்; ஏன் இவ்வாறு நடக்கிறார்கள் என்ற உணர்ச்சி சிறுவனாய் இருந்தபோதே எனக்குத் தோன்றியது. அதாவது மூன்றாம் வகுப்புப் படிக்கின்ற பொழுது அந்த மூன்றாம் வகுப்பிற்குப் பார்ப்பன ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பார்ப்பன மாணவர்களை எல்லாப முன் வரிசையில் அமரச்செய்வார். எங்களை எல்லாம் கடைசி வரிசையில் தள்ளி விடுவார். எங்களிடத்திலேயெல்லாம் அவர் கேள்வியே கேட்கமாட்டார். அப்போதெல்லாம் பெரியாருடைய கூட்டங்களையெல்லாம் கேட்டிருக்கின்றேன். அவர் பார்ப்பனீயம் எப்படியெல்லாம் நம் இனத்தை நசுக்குகிறது என்பதைப் பற்றியெல்லாம் சொன்ன கருத்துகள், அவர் எழுதிய எழுத்துகள், இதழ்களிலே வந்தவை-இவற்றையெல்லாம் பெரியார் அவர்கள் படித்துச்சொல்லும்போது பக்கம் இருந்து அவற்றை நான் கேட்டிருக்கின்றேன். அப்பொழுதே எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. பார்ப்பனர்கள் நம்மை உண்மையாகவே முன்னேறவிடாமல் தடுக்கின்றார்களே என்றெல்லாம் என் இளமையான உள்ளத்திலே எண்ணம் எழுந்ததுண்டு. உயர்நிலைப்பள்ளிக்கு வந்த பின்னாலே அங்கேயும் அப்படித்தான் பார்ப்பன ஆசிரியர்கள் நடந்துகொண்டார்கள். அப்போதெல்லாம் தலைமையாசிரியராகப் பார்ப்பனர்கள்தாம் இருப்பார்கள். அவர்களும் இதுபோல நிலைகளிலேதாம் நடந்து கொள்வார்கள். இப்படியெல்லாம் இருந்த அந்த நிலைதான் எனக்கு இயல்பான ஒரு பார்ப்பன எதிர்ப்பு உணர்வைத் தோற்றுவித்தது. எனவே பெரியாருடைய உண்மையான அந்த உணர்வை நான் இளமையிலேயே உணர்ந்து கொண்டு, வேறு எந்தக் கொள்கைக்கும் என்னை ஆட்படுத்திக் கொள்ளவில்லை. பெரியார் அவர்களுடைய தொண்டைத்தான் மதித்தேன். இது இயல்பாகவே எனக்கு அந்தப் பார்ப்பன எதிர்ப்பு உணர்வாக அமைந்துவிட்டது. பார்ப்பனர்கள் எனக்குத் தனிப்பட்ட முறையில் பகைவர்கள் அல்லர்! ஆனாலுங்கூட அவர்கள் நம் இனத்துக்குச் செய்யுங்கேட்டை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

அந்த வகையில் இந்தக் காலத்துப் பார்ப்பனர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். பார்ப்பனீயம் கல்வித் துறையிலே இன்றும் முழு ஆளுமை பெறுகிறது. கல்வித் துறையில் மேல்துறையை எடுத்துக் கொண்டாலும் சரி. உயர்நிலைப் பள்ளியிலே தலைமை ஆசிரியராக வருகிறவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகத்தாம் இப்போதும் இருக்கிறார்கள். அதேபோல் கல்லூரிகளிலே பேராசிரியர்களாக வருகிறவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகத்தான் இருக்கிறார்கள்,

இன்னும் சொன்னால் கல்லூரி முதல்வர்களாக இருப்பவர்களும் பார்ப்பனர்களாகத்தாம் இருக்கிறார்கள். எனவே கல்வித் துறையிலே நம்முடைய இனப்பிள்ளைகள், மாணவர்கள் முன்னேறுவதற்கு அவர்கள் தொடக்கத்திலிருந்தே தடையாக அமைந்துவிடுகிறார்கள்; அடுத்தது கல்வி முடிந்து பணிகளுக்குப்

போகிறபோது எல்லா வகையான அரசுப் பணிகளிலும் மேனிலை அதிகாரிகளாகப் பார்ப்பவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஒரு திராவிட இன அரசு அமைந்த பிறகுதான் தமிழ் நாட்டிலே ஒரு சில மேனிலைப் பணியில் மாற்றங்கள் ஏற்பட்டன என்று சொன்னாலும் அதையே நாம் முழு நிறைவானதாய் ஏற்கமுடியாது. ஆனால் நடுவணரசைப் பொறுத்தவரைக்கும் அனைத்திலும் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். என்னைவிட உங்களுக்கு அடிப்படையோடும், புள்ளி விளக்கத்தோடும் தெரியும். (சிரிப்பு). ஏனென்று சொன்னால் எல்லா நிலைகளிலும் நம்முடைய பிள்ளைகளை ஓர் உயர்ந்த நிலைக்குச் சென்று விடாதபடி பார்ப்பனர்கள் செய்துவிடுகிறார்கள். அதுபோக, பொதுத் துறைகளாக இருக்கின்ற செய்தித்துறை, செய்தித்தாள்துறை, அஃதாவது செய்தி பரப்புத்துறை, பொதுநலத் துறைகள் இப்படியான அனைத்துத் துறைகளிலும் அவர்கள்தாம் ஆளுமை செய்கிறார்கள். செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்ற நிறுவனங்களிலும் பார்ப்பனர்களே மிகுந்து உள்ளனர். அவர்கள் ஆளுமைக்குட்பட்டே அவை இயங்குகின்றன. எனவே அவர்களுடைய இனநலம் முற்றும் முழுமையைச் சிதைவுறாமல் இன்று வரைக்கும் அமைந்திருக்கிறது. இதை யாரும் இல்லையென்று மறுக்க முடியாது.

இந்தக் காலத்திலே படித்தவர்களாகத் தமிழர்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அதே அளவிற்குப் பார்ப்பனர்கள் இன்னும் கூடுதலாகவே இருக்கிறார்கள். தொகைகள் பெருகப்பெருக அவர்களும் விழுக்காட்டளவிலே பெருகித்தாம் வருகிறார்கள். எனவே நம்முடைய இனம் முன்னேறிவிட்டது என்று சொல்லவே முடியாது. இன்னும் பின் தங்கித்தாம் இருக்கிறது. எங்கோ ஒரு சில அளவிலே பெரியாரவர்கள் ஊட்டிய விழிப்புணர்ச்சி இருக்கிறதென்று சொன்னாலும், நாம் செயலுக்குக் கொண்டுவர முடியாமல் இருக்கிறோம். உண்மையிலேயே பார்ப்பனர்கள் பெரும் தடையாய் இருக்கிறார்கள்.

'பார்ப்பனர்கள் நம்மோடு நல்ல பழக்க வழக்க முறையோடு பழகுகின்றார்கள். சாதி வேறுபாடு காட்டுவதில்லை' என்று ஒரு சிலரும் நல்லவர்கள் என்றும் சிலரும் கூறுகிறார்கள். சொல்லளவிலேதான் அப்படி இருக்கிறதே தவிர செயலளவிலே நாம் அப்படிப் பார்க்கமுடியாது. எடுத்துக் காட்டிற்குச் சொல்கின்றேன். தலைமையாக இருக்கின்ற பார்ப்பன அதிகாரிகள் இருக்கின்ற அலுவலகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த இடத்திலே அந்த அதிகாரி நம்முடைய இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குப் பதவி உயர்வைப் பதவி முன்னேற்றத்தைக் கொடுத்தார் என்று சொல்லமுடியாது. 'தானாகவே பதவி உயர்வுக்குப் பரிந்துரை செய்தார்; நம்முடைய கீழ் அதிகாரிக்குப் பார்ப்பனர்' என்று சொல்ல முடியாது. நம்மவர்களே போய் அதிலே ஈடுபட்டுத் தகுதியெல்லாம் மேலே இருக்கிறவர்களுக்கு எடுத்துச் சொல்லித்தான் அந்தப் பதவி உயர்வு நம்மவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டுமே தவிர, பார்ப்பன

அதிகாரியே விரும்பி நம்மவர்க்குப் பதவி உயர்விற்காகப் பரிந்துரை செய்தார் என்று எங்குமே காண முடியாது. அதேபோல ஆசிரியர்களிடத்திலும்கூட பார்ப்பனப் பேராசிரியர் நம்முடைய தமிழ் இனத்தவரை—இன மாணவரை—எந்த வழியிலாவது உயர்த்திவிட்டார் என்ற செய்தி கேட்க முடியாது.

அண்மையிலே மன்னார்குடியிலே ஒரு செய்தி நடந்ததாகக் கேள்விப்பட்டேன். ஓர் உயர் நிலைப்பள்ளியில் ஆண்டு விழா நடந்தது. அந்த ஆண்டு விழாவிற்குக் காஞ்சி காமகோடி 'பீடாதிபதி' அழைக்கப்பட்டிருக்கிறார்.

அதற்காக வந்தவர் வெளியிலே நகரத்தில் தங்கியிருக்கின்றார். அப்போது அவரை அழைத்துவரச் சென்றவரிடம் சங்கராச்சாரியார். 'உங்கள் பள்ளியில் எத்தனை மாணவர்கள் படிக்கின்றார்கள்' என்று கேட்டிருக்கின்றார். அடுத்து, பிராமண மாணவர்கள் நிறையப்பேர் படிக்கின்றார்களா என்று கேட்டிருக்கின்றார். நிறையப்பேர் படிக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் படிக்கின்றார்களா? என்று கேட்டிருக்கின்றார்! தாழ்த்தப்பட்ட மாணவன் ஒரே ஒருவன் படிக்கிறான் என்று சொல்லியிருக்கிறார். உடனே சங்கராச்சாரியார் 'தாழ்த்தப்பட்ட ஒருவன் படிக்கின்ற பள்ளியின், ஆண்டு விழாவிற்கு நான் வரமுடியாது' என்று அழைக்க வந்தவரிடம் கூறியிருக்கின்றார்.

அந்த ஊரில் ஞானசிகாமணி என்ற பொதுநலத்தொண்டர் ஒருவர் இருக்கிறார்.எனக்கு அவர்தான் சொன்னார், இதை! அவர் கண்ணால் கண்டு காதால் கேட்ட உண்மையான நிகழ்ச்சி இது. ஒரு பிராமணத் தலைவராகக் கருதப்படுகின்ற அவரே தாழ்த்தப்பட்ட மாணவன் ஒருவன் படிக்கின்ற பள்ளிக்கு வரமுடியாது என்று சொல்லுகின்றாரென்றால்—அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே இந்தக் காலத்திலே பார்ப்பனீயம் தமிழ் இன முன்னேற்றத்தை வரவேற்கிறது 'என்று யாராவது சொல்ல முடியுமா?

பார்ப்பனத் தலைவர்களே இப்படி இருக்கின்றார் என்றால் மற்றவர்கள் எப்படி இருப்பார்கள்? தனிப்பட்ட முறையிலே பார்ப்பனர்களுக்கு உண்மையாகவே வேறு வழியில்லை, பழக வேண்டிய நிலைமை இருக்கிறது; நம்மோடெல்லாம் கலக்க வேண்டி இருக்கிறது. குமுகம் என்று சொன்னால் பார்ப்பனர்கள் நம்மோடு கலந்துதான் ஆகவேண்டும், சில இடங்களிலே நம்மவர்கள் மேனிலை இடங்களிலே பணியிலே இருக்கிறார்கள். அதனால் சில வேளைகளில் அவர்கள் அடங்கிப் போகிறார்களே தவிர, நம்மோடு இணைந்து வந்துவிட்டார்கள், நம்முடைய முன்னேற்றத்தில் ஓர் அக்கறை, அன்பு கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனாலும் ஒன்றை நாம் நினைத்துக் கொள்ளவேண்டும்: நம்மிடத்திலே அவர்களைப் பற்றி ஓர்

இரக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ ஒருவகையிலே அவர்கள் முன்னேறிவிட்டார்கள். அதுபோல நாமும் முன்னேற முயற்சி செய்யவேண்டுமே யல்லாது அவர்களை வெறுப்பது என்பது ஒரு குறியாகவே கூடாது. பெரியார் காலத்திலிருந்து நாம் அவர்களுடன் நடைமுறைகளை—கொள்கைகளைத் தவறு என்று சுட்டிக் காட்டி வருகின்றோம்.

பார்ப்பனர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்: நாம் பகைக்கவில்லை. நம்மைத்தான் அவர்கள் விரும்பவில்லை. அப்படி விரும்பினதாக அவர்கள் காட்டிக் கொள்வதில்லை. நம்மை எப்படி வீழ்த்துவது என்ற கொள்கையையே அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். எனவே இன்றைக்கும் அந்தப் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் தேவை. எப்போது அது தேவை இல்லாமல் போகும் என்று சொன்னால் எதிர்காலத்திலே அவர்கள் தங்களை முழுதும் மாற்றிக் கொள்ளவேண்டும் என்று பெரியாரவர்கள் காலத்திலேயே அவர்கள் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

உயர்ந்த சாதி என்கிற செருக்கான போக்கு மேலான தன்மை என்பதற்குப் பல அடையாளங்களை அவர்கள் போட்டுக் கொள்கிறார்களே: குடுமி, பூணூல் போன்றவற்றை வைத்துக் கொள்வது, இன்னும் பல நடைமுறைகளைக் கையாளுவது, கோயில்களிலே தமிழர்களை வரவிடாமல் தடுப்பது, தமிழ் மொழியிலே வழிபாடு கூடாது என்று தடுப்பது, உண்மையாக அவர்களுக்கிருக்கின்ற விழுக்காட்டுப்படி பதவிகளை அடையாமல் நம்முடைய உரிமைகளை அவர்கள் பறித்துக் கொள்வது ஆகியவற்றை அவர்கள் தவிர்க்க வேண்டும். அவர்கள் தமிழினமும் முன்னேற வேண்டும் என்ற கருத்தோடு சாதி மத வேறுபாடுகளைத் தவிர்த்துத் தங்களுடைய எதிர்காலத்தைப் பார்ப்பனர்கள் அமைத்துக் கொள்வார்களேயானால் அவர்களுக்கும் நல்லது; நமக்கும் நல்லது. இன்னும் நமக்கு வேலை குறைந்து போகும், வேறு சிறந்த பணிகளில் எல்லோரும் ஈடுபடலாம்.

அதற்காகவே நாம் ஓர் இய்க்கத்தை வைத்துக் கொண்டிருக்கும் கட்டாயத்தை அவர்கள்தாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள், நாமெல்லாம் என்னத்திற்காகப் போராடி இதே வேலையாய் இருக்கவேண்டும்? பொதுச் செயலாளர் அவர்கள் இந்தியாவில் என்ன நடந்தாலும் பிற்படுத்தபட்ட இனத்திற்கு—தாழ்த்தப்பட்ட இனத்திற்குப் பார்ப்பன இனம் செய்து வரும் தீங்குகளை எடுத்துச் சொல்வதற்கே ஓர் இயக்கத்தை வைத்துக் கொண்டு இருக்கிறார்களே; உண்மையாகவே நமக்கு அந்த வேலை செம்மையானதுதான். பார்ப்பனர்களை நான் கேட்டுக் கொள்வது இந்தத் தலைமுறை மக்களாகிய அவர்களின் இளைஞர்கள் சுராத்தே கற்க வேண்டாம், பூணூல் அணியவேண்டாம். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு உண்மையாக நடு நிலையாகச் சிந்தித்து எல்லாரும் அவரவர் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதிலே ஒரு நடைமுறையை உருவாக்குவார்களேயானால் எதிர்காலத்திலே நல்ல

விளைவுகள் ஏற்படும் வேலைகள் குறையும், பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் இருக்காது.

நேருரை கண்டவர்: திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களின் பணிகள், அவருடைய அணுகு முறைகள் போராட்ட முறைகள் இவற்றைப்பற்றித் தாங்கள் என்ன கருது கிறீர்கள்?

பாவலரேறு : மகிழ்ச்சி! அய்யா, பெரியாருக்குப் பின்னாலே மிக அரும்பாடுபட்டுக் கட்டிக்காத்து ஒரு பெரிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இன முன்னேற்றத்திற்கு உதவுகிற இந்த முயற்சி எதிரிகளாலே எங்கே வீழ்த்தப்பட்டு விடுமோ என்று நான் அஞ்சிய நேரங்கள் உண்டு. அந்த அச்சம் பெரியாரோடு இணைந்து பணி யாற்றிய பலரும் அவருடைய மறைவிற்குப் பின்னாலே தங்களு டைய பதவிப் போராட்ட நிலையிலே நிகழ்த்திய சில அருவருக்கத் தகுந்த முயற்சிகளும் தெரிய வந்த பின்னாலே இன்னும் மிகுதிப் பட்டதே தவிர அந்த அச்சம் குறையவில்லை. ஆனால் ஒரு மூலத் தாய்மை இயக்கம் சிதையாமல் பேணப்படவேண்டும் என்கின்ற கருத்திலே நம்முடைய பொதுச் செயலாளர் மானமிகு 'வீரமணி' அவர்கள் தலைவருடைய போக்கைக் கொஞ்சமும் மாற்றிக்கொள் ளாமல், அவருடைய ஓயாத உழைப்பும் மக்களைச் சந்திக்கின்ற ஊக்கம் நிறைந்த ஒரு முயற்சியும் உண்மையான தலைவனுடைய கொள்கைப் பற்றும் கொஞ்சமும் நெகிழாத ஒரு பற்று இவற்றை யெல்லாம் அடிப்படையாக வைத்துக் கொண்டு இயல்பாக அவருக்கிருக்கிற அறிவுத்திறனோடு அவற்றைச்செயல்படுத்துவதற் குரிய முயற்சியிலே ஈடுபட்ட பின்னால்தான் எனக்கு ஒரு நம் பிக்கை தோன்றியது. *

பெரியார் மறைந்து போனார். இந்த இனக் காப்பிற்காக உண்மையான தலைவர்கள் இல்லை. எனவே இனி நம்முடைய கொள்கைகள்தாம் வலுப்பெறும் என்றெல்லாம் பார்ப்பனர்கள் எண்ணி மகிழ்ந்தார்கள்; ஆனால் அந்த நிலையை நன்றாக விளங்கிக் கொண்டு தம்முடைய பொதுச் செயலாளர் அவர்கள் இந்தக் கழகத்தை முதலிலே காக்க வேண்டும். அதன்பின் பெரியாரவர்-கள் செய்த அந்த இனத்தொண்டு, மக்கள் தொண்டு, பகுத் தறிவுத் தொண்டு, நாட்டுத்தொண்டு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதை ஒரு பெரும் உறுதிப் பாடாகக் கொண்டு அதற்குரிய முறையிலே இந்தக் கழகத்திலே பணியாற்றிய ஏற்கனவே தொண்டர்களாக இருந்த அரும்பெரும் அறிஞர்களை யும், உண்மையான உழைப்பாளர்களையும் துணையாக வைத்துக் கொண்டு, அவர்களோடு இணைந்து அவர்கள் மனம் மகிழுமாறு அவர்களுக்கு அன்பு காட்டி, அவர்களை மதிக்கவும், அவர்களை இந்தத் தொண்டிலே ஈடுபடச் செய்தும், கழகத்தைக் கொஞ்சமும் சரிந்துவிடாமல் வலிமைப் படுத்திக்கொண்டார். எனவே அவருடைய முயற்சிகளும் அடிப்படையிலே மிகச் சிறந்த திட்ட

* இம்மதிப்பீட்டை ஆசிரியரின் 1982-ஆம் ஆண்டைய மதிப் பீடாகக் கொள்க.

முயற்சிகளாக அமைந்தன. அது கொஞ்சம் கொஞ்சமாக வளரத் தொடங்கிய பின்னாலேதான் எனக்கு உண்மையாக முழு நம்பிக்கை தோன்றியது. கட்டாயம் பெரியார் விதைத்த விதைகள், அவர் பாடாற்றிய அந்தக் கருத்துக் கொள்கைகள் இந்த நிலத்திலிருந்து யாராலும் அகற்றப்பட்டுவிட முடியா. இதற்குச் சரியான அடிப்படை திராவிடர் கழகம் என்று எண்ணி நான் மகிழ்ந்திருந்தேன். பிறகு அறிந்தோ அறியாமலோ நம்முடைய வீரமணி அவர்களை அதற்கு முன்னாலே ஈடுபட்ட திராவிடர் கழக அன்பர்கள் அல்லது மேனிலைத் தொண்டர்கள் ஒரு சிலர் அவர்களுடைய நிலையிலே அவருக்கு மாசு கற்பிப்பதற்காகக் குற்றம் குறைகளை மக்களிடத்திலே சொல்லி அவருக்குச் சில இழிவு நிலைகளை ஏற்படுத்திவிட வேண்டும் என்பதிலே ஒரு கருத்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில்தான் நாம் நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களுக்கு ஓர் உண்மையான துணையாக இருக்க வேண்டும். அவர்களை, அவர்களுடைய அந்தக் கொள்கை வினையிலே ஊக்கம் குறைந்து விடும்படி அவர் ஆகிவிடக்கூடாது—மனம் தளர்ந்து விடக்கூடாது—அவருக்கு உண்மையான, வலிமையான துணையாக நாம் போய் நிற்கவேண்டும் என்று எண்ணி அவர்களைப் பற்றி வெளிப்படையாக எழுதத் தொடங்கினேன். அப்படி எழுதும்போது நம்முடைய தென்மொழி அன்பர்களிடமிருந்து கூட எதிர்வுக் கருத்துகள் வந்தன. அவர்களை எப்படி நீங்கள் ஆதரிக்கலாம் என்று கேட்டார்கள்.

தமிழ் இனத்திற்கு கிடைத்த வைரமணி :

'வீரமணி அவர்கள் தமிழ் இனத்திற்குக் கிடைத்த ஒரு வைர மணி' என்று தெளிவாக அவர்களைப் பற்றி எழுதத் தொடங்கினேன். அதற்குப் பின்னாலே பொது மக்களுக்கு - தம்முடைய கழகத்தவருக்கு இடுகின்ற கட்டளைகள் கூட தமிழ் இனத்திற்கே விட்ட கட்டளைபோல் நான் எல்லோருக்கும் அறிமுகப்படுத்துவதும், அதைப் பற்றித் தென்மொழியிலே நான் ஏற்றிப் போற்றுவதும். சில கட்டளைகளை ஏற்று, நானே முன் வந்து என்னுடைய துணையை அறிவித்ததும் அறிந்திருப்பீர்கள்.

நேருரைகண்டவர் :

ஈரோட்டில் கூட மனுதர்மப் போராட்டத்தில் கலந்து கொண்டீர்களல்லவா!

பாவலரேறு : ஆம்! அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டேன். இன்னுங் கூட வர இருக்கின்ற கருவறைப் போராட்டத்திலும் கலந்து கொள்ள இருக்கின்றேன். பொதுச் செயலாளர் அவர்கள் அந்தப் போராட்டத் திட்டத்தை வெளிப்படுத்திய உடன் என்னுடைய முழு ஆதரவையும் இயக்கச் சார்பாக அதற்குக் காட்டுவேன். அவர்களுடைய முயற்சியை-கொள்கையை வலுப்படுத்துவேன். எதற்காகச் சொல்கிறேன்? எனக்குப்

பொதுச் செயலாளர் அவர்களிடத்திலே நிறைவான ஒரு மதிப்பான கொள்கை, அன்பு உண்டு என்று சொன்னல் தமிழகத்திலே இருக்கின்ற இவர்கள் எல்லாரையும் விட ஒரு பொதுநல உணர்வு தூய்மையாக உள்ள தலைவர், அவர் ஒருவர் தாம்; அந்த உள்ளம் மக்களைச் சார்ந்தே இருக்கிறது. மற்றவர்களை நான் குறை கூறவில்லை. குறையும் நிறையுமாகச் சிலர் இருக்கிறார்கள். ஆனல் இவரிடத்திலே முழுமையாக அந்த உணர்வு இருக்கிறது. அ'தாவது எந்தக் கருத்தையும் அரசுக்கு எதிரானதாக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாரும் அதற்கு ஆதரவு தராமல் போனலும் சரி, அவர் எது மக்களுக்கு நலம் என்று கருதுகின்றரோ அதற்காக உடனே முன்வந்து அதற்காகப் போராடுகிறார் பாருங்கள்!

அந்த உணர்ச்சி வேறு யாரிடத்திலும் இல்லை. பொதுவாகவே மக்கள் சிக்கலில் போராட்டங்களைத் தொடங்குகின்ற தலைவர்கள், மக்களிடத்திலே எந்த வகையிலே வரவேற்பு இருக்கும், மற்றவர்களிடத்திலே எந்த வகையிலே வரவேற்பு இருக்கும் அதனலே கொஞ்சம் எந்த அளவு ஊதியம் வரும் என்றெல்லாம் பார்த்துத்தான் தொடங்குவார்கள். ஆனல் பெரியார் செய்ததைப் போலவே மற்றவர்கள், மக்களே அதை விரும்பவில்லை என்றாலுங்கூட, மக்களுக்கு நலஞ்செய்கிற போராட்டம் என்று சொன்னல், அதைப் பெரியார் போலவே துணிந்து செயல்படுவதற்கு ஒருவர் இருக்கிறார்—என்று சொன்னல்—அவர் நம்முடைய பொதுச் செயலாளர் அவர்கள் ஒருவர்தாம். மற்ற தலைவர்களிடத்திலே உண்மையான ஒரு தொண்டு உணர்ச்சியை நான் அவ்வளவாகப் பார்க்க முடியவில்லை. அதனல்தான் நான் அவரை மக்களுக்கு நலஞ்செய்யக் கூடிய ஓர் உண்மையான வகையிலே தம்முடைய பொதுப்பணியை ஆற்றுகிறார், கழகத்தைக் கொண்டு செல்கிறார், பெரியார் வழியிலே ஒரு சிறு அணு அளவும் பிசகாமல், அ'தாவது பெரியார் ஒரு தலைவர் என்கின்ற நிலையிலே இருந்து செயலாற்றினர்கள் என்று சொன்னல், நம்முடைய பொதுச் செயலாளர்தாம். அவர்கள் தலைவருக்குத் தலைவராகவும், தொண்டருக்குத் தொண்டராகவும், இரண்டு வகையிலும் எந்த வகையான பெருமையும் கருதாமல் அந்தத் தொண்டைத் தமக்கென எடுத்துப் போட்டுக் கொண்டு செயல்பட்டு வருகிறார். இதை நான் வெறுமனகச் சொல்லவில்லை. எடுத்துக் காட்டாகச் சொல்கிறேன். பெரியாரவர்களுடைய சுற்றுச் செலவுகளைப் பார்த்திருப்பீர்கள். (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

தமிழுக்கு எழுத்துச் சீரமைப்பு தேவைதானு?

க. சி. அகமுடைநம்பி. க. மு: பொறி. இ.

செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல்,
வேளாண்மைப் பொறியியல் பயிற்சி நடுவம், திருச்சி,

தமிழ் வளர்ச்சி குறித்துத் தற்போது அறிஞர்கள் பலர் அக்கறையுடன் கருதிப் பார்க்கத் தொடங்கியிருப்பது வரவேற்கத் தக்கது; போற்றதலுக்குரியது. ஆயின், தற்போதுள்ள நம்முடைய மொழியின் வளர்ச்சி நிலையையும், வளர்ச்சிக்குத் தடையாக உள்ள கூறுபாடுகள் பலவற்றையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எழுத்துச் சீரமைப்பு என்ற பெயரில் தமிழ் எழுத்துகளில் வரிவடிவ மாற்றம் செய்திடக் கருதுவது தேவைதானு என்பதை அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும் ஆய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

எழுத்துச் சீரமைப்பின் தேவையை வலியுறுத்துகின்ற முனைவர் (டாக்டர்) வா. செ. குழந்தைசாமி அவர்கள் அதற்கு இரண்டு முகாமைக் காரணங்களை முன் வைக்கிறார்.

(1) குறியீடுகளைக் குறைத்தால் மொழியைக் கற்றுக் கொள்வது குழந்தைகளுக்கு எளிதாகிவிடும்.

(2) குறைக்கப்பட்ட குறியீடுகளுடன் தட்டச்சு மற்றும் கணிப்பொறிகள் வழி தமிழ் மொழியைப் பயன்படுத்துவது எளிது.

1. முதல் காரணத்தை எடுத்துக் கொள்வோம். எழுத்துகளின் எண்ணிக்கை மாறுமல் குறியீடுகள் மட்டும் குறைக்கப்படும் என்ற நிலையில், குறியீடுகளின் குறைப்பு மட்டும் தருகின்ற எளிமை குறிப்பிடத்தக்க அளவு இருக்க வாய்ப்பில்லை. மேலும், இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளில் புதிய குறியீடுகளைக் கொண்டு எழுதப்படும் எழுத்துகளை நோக்கும் போது, எதிர்பார்க்கப்படும் அந்த எளிய எளிமைகூட வாய்க்குமா என்பது ஐயமே.

மு - என்று எழுதுவதில் உள்ள எளிமை முo் என்று எழுதுவதில் இல்லை. கூ - என்று எழுதுவதில் உள்ள எளிமை கக என்று எழுதுவதில் இல்லை என்பதுடன், க - என்ற குறியீடு, கையெழுத்தில் க - என்றே தோற்றமளிப்பதாகும். டு - என்று எளிதாக எழுதுவதை விடுத்து டd என்று எழுதுவது தொல்லையைக் கூட்டும் என்பதுடன், கையெழுத்தில் ப - என்ற எழுத்தாகவோ ம - என்ற எழுத்தாகவோ மாறித் தோன்றக்கூடிய வாய்ப்பு உள்ளது. யி - என்ற எழுத்தை யா என்றெழுதுவதில் கையெழுத்தின், விரைவில் பா என்று தோன்றக்கூடிய வாய்ப்பு

உள்ளதை மறுக்க முடியாது. சி - என்று எழுதுவதில் உள்ள எளிமை சா என்றெழுதுவதில் இராது என்பதுடன், கையெழுத்தில் சா - என்று தோன்றக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

இவ்வாறு கருதிப் பார்க்கும்போது, தமிழ் எழுத்துகளுக்குள்ள சீர்மையை, எழுத்துச் சீரமைப்பு என்ற பெயரில் குறைத்திட வேண்டுமா என்பதை நாம் கருதிப் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் 'ஒரு கட்டடம் - ஒரு வீடு' என்பதற்கு மாறாக, 'ஒரு கட்டடம் - பல வீடுகள்' என்ற ஒப்பீட்டு உருவகம் நம் நினைவுக்கு வருகிறது. ஒரே கட்டடத்தில் பல வீடுகளை அமைப்பது என்பது செலவைக் குறைக்கும்; கட்டுமான வேலையும் எளிதாகும். ஆனால், சிறு வீடாக இருந்தாலும், தனி வீடாகக் கொள்வதில் உள்ள ஒரு முழுமை, ஒரு நிறைவு ஒரே கட்டடத்தில் பெட்டி பெட்டியாக அமைக்கப்படும் பல வீடுகளில் இரா. இது போலவே, தமிழ் மொழியில் தற்போதுள்ள உயிர்மெய் இகர - ஈகாரங்கள், உகர - ஊகாரங்களில் உள்ள ஒவ்வோர் எழுத்தும் தன்னளவில் முழுமையுடையதாகவும், செப்பமுடையதாகவும் உள்ளது. புதிய தனிக் குறியீடுகளில் மாற்றம் செய்யப்படும் எழுத்துகள் குழப்பத்துக்கே இட்டுச் செல்கின்றன. இவை எளிமையை அளிப்பதாகத் தோன்றவில்லை.

2. இனி, எழுத்து மாற்றத்துக்காகக் கூறப்படும் இரண்டாவது காரணத்துக்கு வருவோம். தட்டச்சு, கணிப்பொறி ஆகியவற்றுக்குப் பாங்காக அமையவேண்டுமென்றால், குறியீடுகளைக் குறைத்து எழுத்து வடிவங்கள் மாற்றப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் கூறுகிறார்; "கணிப்பொறியைப் பயன்படுத்த வேண்டுமானால், ஒவ்வோர் எழுத்தும் இயன்றவரை ஒரு குறிப்பிட்ட அளவுள்ள சதுரத்திற்குள், அல்லது நீண்ட சதுரத்துக்குள் அடங்குவதாக இருக்க வேண்டும். தமிழில் கி - எழுதினால் அதன் இகரக்குறியீடு மேலே செல்கிறது. கு - எழுதினால் அதன் கீழ் விலங்கு கட்டத்திற்குக் கீழ் செல்கிறது..."

இவ்வாறு கூறும் அவர், மேலும் கூறுகிறார்: "இவையனைத்தையும் கணிப்பொறியும், தட்டச்சும், தொலையெழுதியும் எதிர்கொள்ள இயலும் என்றாலும், அது பாறுங்கல்லை இடுப்பில் கட்டிக்கொண்டு ஆற்றைக் கடக்க நீந்துவது போன்றதாகும்".

எதிர்கொள்ள இயலும் என்று கூறிவிட்டுத் தட்டச்சு, கணிப்பொறி போன்ற தற்காலக் கருவிகளுக்காகத் தமிழ் எழுத்து வரிவடிவங்களை மாற்றித்தான் ஆகவேண்டும், மாற்றுவது தவிர்க்க முடியாதது என்று ஏன் கூறவேண்டும்?

கணிப்பொறி மூலம் எழுதப்பட்ட இரண்டு பத்திகள் காண்பிக்கப்பட்டுள்ளன; 'இயற்கை' என்ற சொல்லில் வரும் இ -

எழுத்து சதுரத்துள் அடங்கும் வண்ணம் சிறிய அளவானதாக அமைத்து இயற்கை என்று எழுதப்பட்டுள்ளது. த, ழ - போன்ற உயிர்மெய் எழுத்துகளும், ஆ, இ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ போன்ற உயிரெழுத்துகளும், ெ, ே - போன்ற உயிர்க்குறியீடுகளும் சதுரம் அல்லது நீண்ட சதுரத்துள் அடங்கும் வண்ணம் குறுக்கி அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோல, இகர - ஈகார, உகர - ஊகார உயிர்மெய் எழுத்துகளையும் மற்ற எழுத்துகளின் மேல்-கீழ் மட்டத்திலேயே அமையும் வண்ணம் குறுக்கி எழுதி, கணிப்பொறியில் பயன் படுத்துவதில் என்ன தடை? இங்கு மட்டும் இயலாமை எப்படி குறுக்கே வருகிறது?

தட்டச்சைப் பொறுத்த மட்டில், தமிழ்த் தட்டச்சுக் கருவி புழக்கத்தில் வந்துவிட்டன. கணிப்பொறியில் தமிழைப் பயன் படுத்துவதற்கு யாதொரு தடையும் இல்லை எனலாம்.

ஆக. எழுத்துச் சீர்திருத்த ஆர்வலர்கள் திட்டமிடும் எழுத்து மாற்றங்கள் தவிர்க்க முடியாதன என்று கூறுவது சரியன்று என்பது தெளிவாகிறது.

ஃ ஃ ஃ

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்டு வந்துள்ள படி நிலை(பரிணாம)வளர்ச்சியின் விளைவாகவே தற்போதைய தமிழ் எழுத்துகள் வடிவம் பெற்றுள்ளன. மாற்றம் தவிர்க்க முடியாதது என்ற நிலை தற்போது இல்லை. அத்தகு ஒரு நிலை குறுக்கிடும் போது சீரமைப்பு குறித்துச் சிந்திக்கலாம். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக வரிவடிவு மாற்றங்களை வலிந்து திணிப்பது மொழி வளர்ச்சிக்கு ஏதுவாக அமையாது. மாறாக, ஒரு தேக்க நிலையைத்தான் அது உண்டாக்கக் கூடும். எழுத்துச் சீரமைப்பு தேவை என்று கருத்துக் கொண்டிருந்த அறிஞர்களை மட்டுமே முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் தம் கட்டுரையில் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார்; தேவையில்லை என்று மறுப்புரை வழங்கியுள்ள அறிஞர்களையும், அவர்தம் மறுப்புரைகளையும் சேர்த்து இருவேறு கருத்துகளையும் ஒப்பீடு செய்திருந்தால், துணை வேந்தர் அவர்களின் கட்டுரை நிறைவானதாக அமைந்திருக்கும். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், கழக இலக்கியச் செம்மல் இரா; இளங்குமரன் போன்ற தமிழறிஞர்கள், தமிழ்க் காவலர்களின் கருத்துகளைத் தமிழ் வளர்ச்சிக்குத் திட்டமிடுவோர் புறக்கணிக்கலாமா?

வரிவடிவங்களை மாற்றியே ஆகவேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டிராமல், இன்றைய நிலையில், தமிழ் வளர்ச்சிக்குரிய மெய்யான தேவைகள் குறித்துத் தமிழக அரசுக்குப் பரிந்துரைக்க அறிஞர்கள் முன்வர வேண்டும்;

Scanned with CamScanner

அண்மையில், சீனப் பேராசிரியர், சாங்-சீ-லின் அவர்கள் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியங்களைப் பயின்று ஆய்வு செய்திடவேண்டி வந்தவர், தமிழரிடையே நிலவும் தமிழ்ப் பயன்பாடு குறித்து ஏமாற்றமும், வருத்தமும் உற்றதாகக் கூறி யுள்ள கீழ்க்காணும் கருத்துகளை நாம் கவலையுடன் கருதிப் பார்க்கவேண்டும்:

''ஆங்கிலச் சொற்களைக் கலக்காமல் யாரும் தமிழில் உரை யாடுவதில்லை. எனக்கு ஆங்கிலம் சரியாகத் தெரியாது. தமிழ் நாட்டில் பேசப்படும் ஆங்கிலத் தமிழைப் புரிந்து கொள்வது கடினமாயிருக்கிறது. பள்ளி செல்லும் சிறுவர் சிறுமியர்கூட, உரையாடலில் ஆங்கிலத் தமிழைப் பேசுவது அதிர்ச்சியாக உள்ளது. மாத, கிழமை(வார)த், தமிழ் ஏடுகளில் வரும் கட்டுரைகள், கதைகளைப் படித்தால் மொழிநடை மிகவும் இழிவாக (மோசமாக) உள்ளது; தமிழைக் காண்பது அரிதாக உள்ளது.

''தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களிடம் பேசி எனக்கு ஏற்பட்ட பட்டறிவு (அனுபவம்) மிகவும் வருந்தத்தக்கது... பொதுவான (சாதாரண) வழக்கில்கூட, மக்கள் ஆங்கிலத்தைக் கலக்கிறார்கள். மிதிவண்டி என்பதற்குப் பகரமாக (பதிலாக) சைக்கிள் என்று கூறுகிறார்கள். பேருந்துக்குப் பகரமாக (பதில்) பஸ் என்று சொல்லுகிறார்கள். தற்போதுள்ள சூழலில் தமிழ் நாட்டில் தமிழ்மொழி பேசப்படுமானால், எழுதப்படுமானால், தமிழ்மொழி வளர்ச்சி குன்றி, மொழிச் சிதைவுகூட ஏற்படலாம்.

''நான் தமிழர்களுக்கு விடுக்கும் ஒரு வேண்டுகோள்: தமிழர்களே, செந்தமிழை நடைமுறையில் பேசி, எழுதி. தமிழைக் காப்பாற்றுங்கள் என்பதாகும். தொன்மை மிக்க தமிழை வளரும் காலத்திற்கு ஏற்ப, அறிவியல் உட்பட எல்லாக் கலைகளையும் தமிழில் கொண்டு வந்து வன்மை மிக்க, வளமை மிக்க மொழியாக வளர்ச்சிப் பெறப் பாடுபடுதல் வேண்டும். உறுதியாகத் தமிழர்களால் இது முடியும் என நினைக்கிறேன்''. (குங்குமம் இதழ் 23-9-88)

இந்தச் சீனப் பேராசிரியரின் வேண்டுகோளைத் தமிழறிஞர்-களும், பிறதுறை அறிஞர்களும் தமிழக அரசும் அக்கறையுடன் கருதிப் பார்க்கவேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு உடனடித் தேவை என்னென்ன என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஏற்க முன்வரும் மாணவர்களுக்கு அரசுத் துறைகள் சிலவற்றிலேனும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கலாம். உள்ளாட்சித்துறை. கூட்டுறவுத்துறை, அறநிலையத்துறை, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் போன்றவற்றில் தமிழைப் பாடமொழி-யாகக் கொண்டு பட்டம் பெறுபவர்களுக்கு வேலை வாய்ப்பில்

(அடுத்த பக்கம் தொடர்ச்சி)

பெயருக்கு வாழ்கிறன், தமிழன்!

சொல்லாய்வறிஞர், ப .அருளி

செந்தமிழ், பைந்தமிழ், நறுந்தமிழ், அருந்தமிழ், தீந்தமிழ், தண்டமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், நற்றமிழ் என்றவாறெல்லாம் பெருமையையும், அருமையையும் குறித்துத் தமிழைத் தமிழர்கள் போற்றியது அல்லது போற்றுவது போல, உலகத்தில் வேறு எந்த மொழிக்காரர்களும் தம்தம் மொழியைப் போற்றி இவ்வாறு அடை கொடுத்து நிறக்கச் சிறப்பித்துச் கொண்டதாகத் தெரியவில்லை! அவ்வளவு பட்டங்களும் பாராட்டுதல்களும் தமிழர்களிடம் தமிழைப் பொறுத்த அளவில் உண்டு, எனவே பாராட்டினர்கள் என்பதைவிட, ஓரளவுக்கு அதன் உண்மையை விளங்கிக் கொண்டு அப்படி வழங்கி மகிழ்ந்தார்கள் என்பதே பொருந்துவதாகும்!

உலக முதன் மொழியாகிய செந்தமிழ்க்கு முதன் முதலில் ஏற்பட்ட பெயர் 'மொழி' என்பதே. பிற மொழிகள் கிளைத்துப் பல்கிய நிலையில், முந்திச் சிறந்து நீடிய தம் மொழியைக் குறிக்கத் 'தமிழ்' என்னும் உரிமைக் கருவுணர்வு பொதிந்த சொல்லைத் தமிழர்கள் உருவாக்கியிருக்கிறனர்.

உலக மொழிகளில் பெரும்பான்மையானவை தமிழ்மொழி-யின் உயிர்வளியையே உயிர்த்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றன! உலகம் தெளியத் தெரிந்து உணர்ந்து கொள்ளாதது, சிறக்கப் புறப்படுத்தப் பெறாத உண்மையாகவே இன்றும் இதன் நிலை உள்ளது. மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தம், கொரகம் (இவை தென் திரவிடம்), தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி கூவி கோலாமி, பர்சி, கதபா, கொண்டா, நாய்க்கீ பெங்கோ, மண்டா (இவை நடுத்திரவிடம்),

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

முன்னுரிமை கொடுக்கலாம். அரசு கொடுக்கவல்ல இத்தகு ஊக்குவிப்புக்காரணமாகத், தமிழைப் பயிற்றுமொழியாக ஏற்றிட முன்வரும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகப்படும். அதன் தொடர்ச்சியாக அறிவியல் போன்ற கலைகள் பலவும் இயல்பாகவே தமிழுக்கு வந்து சேரும்.

அடுத்து, நகர்ப்புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளும் புற்றீசல்போல் வெளிக்கிளம்பும் ஆங்கிலப் பள்ளிகளைத் தடுத்து நிறுத்தவேண்டும்; அல்லது கட்டுப்படுத்தவேண்டும். இன்றுள்ள தமிழர்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் தமிழுணர்வு போதிய அளவு இல்லாமலிப்பதற்கு முதல் காரணம் குழந்தைப் பருவத்தில் கிடைக்கின்ற 'ஏனோதானோ' என்ற தமிழ்மொழிப் பயிற்சியே என்னலாம். மொழியுணர்வும், தாய்மொழிப் பற்றும் மொழி வளர்ச்சியை இயல்பாகக் கொண்டு வந்து சேர்க்கும்.

குருக், மால்தோ, பிராகூய் (இவை வட திரவிடம்) என்னும் இருபத்திரண்டு மொழிகளும் நேரிடையாகத் தமிழ்த் தாய்க்குப் பிறந்த பிள்ளை மொழிகளாகும்.

ஒரு கருத்தைத் துலங்க வெளிப்படுத்தற்கு அருமையான அமைவுடைய முதற் பழம்பெரு மொழியாக உலக மொழிகளுள்ளே தமிழே தகுதியும் தலைமையும் உடையதாயிருந்தது. அவற்றின் சிறப்புச் சாறங்களைக் கடைக்கழக இலக்கிய நூல்களில் மிகப் பரவலாகக்காண வியலும்!

பொருளைச் சுட்டும் சொற்களில் பெரும்பான்மையான ஒலியளவையில் நனிமிகச் சுருக்கமான அமைப்புடையதாகிய அரிய வளமொழி தமிழாகும்! ''அஞ்செஞ் சீறடி'' (அகம் 389; 7 எனும் ஒரு சிறு சொற்றொடரில் ஏழு எழுத்துகளே அமைந்திருக்க, அதனுள் ''அழகிய சிவந்த சிறிய அடிகள்'' என்னும் நான்கு கருத்துப் பொருள்கள் செறிய நிறைந்திருப்பதைக் காணின், இந்த உண்மை விளங்குவதாகும், அதேபோல் ''சிறுகண் யானை நெடு நா ஒண்மணி'' (அகம் 24 : 13) என்னும் அகச் செய்யுளின் அளவடியொன்றில், பதின்மூன்று எழுத்துகளே அமைந்திருக்க, அதனுள்ளாக ''சிறிய கண்களையுடைய யானையின், நெடிய நாக்கையுடைய ஒளி பொருந்திய மணி' என்னும் ஏழு கருத்துப் பொருள்கள் குவியக் கொட்டிக்கிடப்பதையும் காணின் தமிழ் மொழியின் அழகொழுங்கும், திணுக்க நுணுக்கமும் தெளியப் புலனாகும்! இவை போன்ற அமைப்பின, தமிழ் மொழிக்கண் மிக ஏராளமாகும்!

தமிழினத்தின் பழமுது வரலாற்றை அறிவதற்கு இன்றைக்குள்ள அரும்பெரும் ஆழமான சான்றுகள் அடங்கிய குறிப்புக் குவியலாகத், தப்பித் தவறி உய்ந்து உயிர்த்துக் கொண்டிருக்கும் கழகக்கால இலக்கிய நூல் தொகுதியும், தொல்காப்பிய இலக்கணப் பெட்டகமும் இலங்குகின்றன!

நடுநிலைக் கண்ணோட்டத்தோடு துருவிக் காண வல்ல எந்த வரலாற்று அறிவனும் தெள்ளிதின் விளங்கிக் கொள்ளுதற்கு இயலும்படியாக நூறாயிரம் வரலாற்றுச் செய்திகள் அவற்றில் தெறிப்பதையும், ஒளிர்வதையும், சில பகுதிகளில் பதுங்கியிருப்பதையும், பல பகுதிகளில் புதைப்பட்டுக் கிடப்பதையும், கண்டு கொள்வான்!

நடுநிலைக் கண்ணோட்டத்தோடு மெய் காண வேட்டும் துடிப்புணர்வொடு முயன்று உழைப்பெடுக்க வல்ல எந்த மொழியியல் முனைவனும் உலகத்திலேயே முந்தி உருவெடுத்துள்ள அதன் உண்மைப் பாங்குகளையும், அதற்குரிய பல்லாயிரமாண்டு ஊட்ட வளர்ச்சியையும் அம்மொழியுள் பொதிந்து பதிந்துள்ள ஒரு பழம் பேரினத்தின் வாழ்க்கை வரலாற்று விளக்கத்தையும் சிறக்கவும் நிறக்கவும் காணவியலும்!

உலகின் பிற இனங்களின் வரலாற்றுக்குத் துணைகளாக இன்று வரை கிடைக்கும் அத்துணைச் சான்றுகளையும் ஓரிடத்தில்

Scanned with CamScanner

எடுத்து வைத்துக் கொண்டு, அதற்குப் பக்கத்திலேயே தமிழினத்திற்கென இன்று நிலைத்து நிற்கின்ற கடைக் கழகக்கால இலக்கண இலக்கியங்களாகிய அறிவு நூற் சான்றுகளையும் வைத்துக் கொண்டு, காய்தல், உவத்தல் அகற்றிய செம்புலக் கண்களொடு ஆய்வுணர்வொடு ஒருவன் கூர்ந்து ஒப்பிட்டு நோக்குவானானால், தமிழ் மொழியின் செம்புல மேன்மையும் முன்மையும், அத்தகு பேராக்கத்தை உருச் சமைத்த தமிழினத்தின் பழைமையும் தலைமை வாய்ந்த அசைக்கவியலாத அடிப்படை உண்மைகளையும் அடைவொடு செறித்தாறு நிரலுற்ற ஒரு பெருங்காட்சியே முதன் முதலில் ஆங்கே அவனுக்குப் புலப்படுவதாகும்!

தமிழினம்! உலகத்தின் முதல் மாந்தன் உருவாகிய இனம்! உலகத்தில் முதன்முதலில் மொழி உருவாகிய இனம்! உலகத்தில் முதன்முதலில் பண்பாடும் நாகரிகமும் நிறைந்து வளர்ந்த இனம்! உலகம் துய்க்கும் அத்துணை அறிவு நலன்களுக்கும் மூல வித்துகளை வழங்கிய மாப்பேரினம்! மறத்திற்கும் உரத்திற்கும் தலை சிறந்த இனம்! அன்பும் நண்பும் அணிந்து இலங்கிய எழிலார்ந்த இனம்! உலக இனத்தையெல்லாம் ஒன்றென அணைத்து மகிழ்ந்த, சிறந்த இனம்! நள்ளிருளில் புதைந்திருந்த உலகத்தின் பிற இனத்தவரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நாகரிகச் சுடரேற்றி ஒளிர்வித்த இனம்!

இன்றைக்கு, இத்தமிழினத்திற்கு வீழ்ச்சி எவ்வெவ்வகையில் ஏற்பட்டது, எவரெவரால் அது வீழ்த்தப்பட்டது. எந்தெந்தப் பொழுதில் அது நலிக்கப்பெற்றது. எங்கெங்கெல்லாம் அது தாழ்த்தப்பெற்றது என்று, பரக்க விளங்குமாறு வரலாறு எழுதப் பெறவேண்டிய அளவுக்கு இத்தமிழினம் மிகமிகத் தாழ்ந்து, தறைந்து வீழ்ந்து, ஆழ்ந்து தேய்ந்து, காய்ந்து கருவடைந்து, உருநொடிந்து திருவிழந்து, மாய்ந்து போகின்ற நிலையில் மயங்கி உயிர்த்து உலைவுற்று வலிவற்றுச் சாய்ந்து படுக்கையில் கிடக்கின்றது!

தமிழ் என்னும் மொழிப் பெயரும், தமிழன் என்னும் மொழி வழியான இனத்தவன் பெயரும், தமிழ்நாடு என்னும் மொழி வழியான நாட்டின் பெயரும், இங்கு ஏட்டிலும், பாட்டிலும், பலகையிலும் சுவரிலும், உரையிலும். தரையிலுமாக ஓரோரிடத்தில், தப்பித் தவறிப் பிதுங்கித் தோன்றுவதல்லாமல், தமிழனின் நெஞ்சில், தமிழனின் அறிவில், தமிழனின் உணர்வில் அணுவின் இம்மிக்கூறு அளவிலும் அது இல்லவேயில்லை! உள்ளப் பசையே காய்ந்து போயினமையால், செயலிலே ஈரம் இல்லாதவனாய் தமிழன் ஒவ்வொருவனும் தன்னலக்காற்றை உட்கொண்டு உயிர்த்தவாறு நடைப்பிண விலங்காண்டியாய் உலவுகின்றான்! முன் கால்கள் இரண்டும் பிணித்துக் கட்டப்பெற்றுப், பின்னங்கால்களில் ஒன்று சூம்பியும், மற்றொன்று சுளுக்கும் கொண்ட நிலையில், பாரம் சுமந்து செல்லும் கிழக்கழுதை போல இடி நடையிட்டுக்கொண்டு, பெயருக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறான்!

முரண்பாடான அரசு முயற்சிகள்! எதிர்பார்க்கும் விளைவு எப்படி வரும்?

ஒரு புறம் 'புராணம்' படிப்பது; மறுபுறம் 'அறிவியல்' வளர்ப்பது. ஒரு பக்கம் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் படிப்பு வரும் என்பது; மறுபக்கம் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களை அடிக்கடி சீர்திருத்துவது. ஒருபுறம் கோயில் குடமுழுக்குகளைச் செய்து கூத்தடிக்கவும், கொள்ளையடிக்கவும் வாய்ப்பளிப்பது; மறுபுறம் சீர்திருத்தச் சட்டங்களையும், காவல் கண்காணிப்புகளையும் பெருக்குவது. ஓரிடத்தில் பிள்ளை பெறுவதும், செல்வம் பெறுவதும் தெய்வத்தின் செயல் என்று வாரிகளையும், பூரிகளையும் வைத்துக் கதையளப்புகளைச் செய்ய இடந்தழுவது. மறுபுறம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களையும், நிலச் சீர்திருத்தங்களையும் செல்வ வரம்புகளையும் கொண்டு வரச் சட்டங்களைப் போடுவது. ஒரு பக்கம் போலிப் பொருள்களையும், அவை பற்றிய புனைசுருட்டு விளம்பரங்களையும் வானொலியிலும் செய்தித்தாள்களிலும் செய்யவும், தெருக் கடைகளில் விற்கவும், அரசினரே வாய்ப்பளிப்பது; மறுபக்கம், அவற்றால் நாட்டுக்குக் கெடுதி-மக்களுக்குக் கெடுதி-என்று மருத்துவர்களையும் அறிஞர்களையும் கொண்டு அதே வானொலியிலும் செய்தித்தாள்களிலும் கதையளப்புகளைப் பண்ணச் செய்வது. ஒருபுறம் சாலிப் பயல்களையும் கூலிக் கலைஞர்களையும் விட்டுப் படுகீழ்மையாகவும், சுயமையாகவும் பாட்டெழுதவும், படமெடுக்கவும் செய்து, மக்கள் கெட்டுப்போக அரசினரே வழி வகுப்பது; மறுபுறம் மக்கள் பண்பாடு சீர்குலைவதற்கும், கேடுகள் மலிவதற்கும் குழுக்களைப் போட்டுக் கரணியங்களை, ஆராய்ந்து, வழுக்களைக் கண்டு பிடித்துக், கோடி கோடியாய்ப் பணத்தைச் செலவழித்து, அறம் பேண முயல்வது.

—இவையெல்லாம் மூளைக்குழப்பக்காரர்களும், முடிச்சு மாறிகளும் நிறைந்த நாட்டில்தான் நடக்கமுடியுமே தவிர, கொஞ்ச மேனும் அறிவுள்ளவர்கள் உள்ள நாடுகளில் நடைபெற முடியாது, ஒருவனைப் 'பூணூல்' போடுவதற்கும், 'பிரமன்' என்னும் 'பெட்டைய'னின் முகக்குறியில் தோன்றினன் என்பதால் 'பிராமணன்' என்று அழைத்துக் கொள்வதற்கும், சட்டப்படி உரிமை கொடுத்து விட்டு, இன்னொரு புறத்தில் தீண்டாமைத் தடுப்புச் சட்டம் கொண்டு வருவதும், மண்டுகள் அமைச்சர்களாய் உள்ள இந்த நாட்டில்தான் நடக்கும்!

—இவ்வாறு வறுமைக்கும் மூடநம்பிக்கைக்கும் வழி திறந்து விட்டுவிட்டு, அவற்றைப் போக்குவதற்கு அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி—உமி குத்திக் கைநோகும் உன்மத்தம் பிடித்த அரசை உலகில் வேறு எந்த நாட்டிலும் காணவே முடியாது.

—பழைய தென்மொழியிலிருந்து

கருணாநிதிக்கே ஆதரவு அளிக்கவேண்டும், தி. மு. க.வையே தமிழர்கள் வெற்றி பெறச் செய்க என்ற வேண்டுகோள் வெற்றியடைந்தது குறித்து மகிழ்ச்சி. தமிழகம் தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்தும், உணவுப் பஞ்சத்திலிருந்தும், பொருளியல் நெருக்கடியிலிருந்தும் விலகிச் செழுமையான வாழ்வைத் தர இயற்கை அன்னையை வேண்டுகிறேன். தங்கள் நல்வாழ்வை விரும்பும்;

— இரா. இராபர்ட் சோழன், சிறிய அந்தமான்;

○ : 1336 : அன்பு ஐயா, வணக்கம். தங்களை நேரில் பார்க்க நேர்ந்தபோது, மிகவும் இளைத்திருந்ததைக் கண்டு எம்மனம் மிக நொந்தது. இந்த உலகில் யாரைநம்பி, எதிர்நோக்கித் தாங்கள் தமிழின நாட்டுத் தொண்டை மேற்கொண்டீர்கள்? கடந்த 30 ஆண்டுகளாகத் தங்களையே உலகமாக எண்ணிச் சுற்றிவரும் ஏழைத் தமிழர்களைக் கடிந்து கொள்வதால் பயன் என்ன? நம் இனத்தவர்களின் மேம்பாட்டிற்காக அவர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டினால், நம்மையும் புறப் பகைவர்களாகவே எண்ணி விடுகிறார்கள் என்பதால்—அவர்களின் குணத்தைப்போற்றி, மேற்கொண்டு அவர்கள் ஆற்ற வேண்டிய நற்றமிழ்ப் பணிகளை வலியுறுத்துங்கள்!

இன்றுபோல் தமிழ்நாடும், மக்களும், மொழியும், வேறு என்றும் தாக்கப்பட்டுத் தாழ்ந்த நிலையில், இருந்ததில்லை! இந்த நிலையில் தந்தை பெரியார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்றவர்களின் வழியில் கடந்த, 40 ஆண்டுகளாகத் தாங்கள் விடாப்பிடியாக நடந்துக் காட்டி, வறுமையிலும் பெருமிதமாக இருக்கும் தாங்களா, இக்கால் சோர்ந்து விடுவது? இந்நாள் வரையில் தாங்கள் வாடாத வாட்டமா?படாத பாடா?

இதற்காகத் தாங்களே வலிந்தும், துணிந்தும் தலை மேற்கொண்ட தலையாய தமிழ்ப் பணியை—இதழ்கள் நடத்துவதைக் கைவிடுவதா? அப்படிச் செய்தால் நம் புறப் பகைவர்களுக்கு எத்துணைக் கொண்டாட்டமாகும்! நம் நைந்துபோன தமிழர்களுக்கு எத்துணைப் பேரிடியாகும்!

தாங்கள் எவ்வளவோ உணர்ந்தவர்கள் தமிழ-ஆரியப் போராட்டங்களை எல்லாம் நன்கு தெளிந்தவர்கள்! எம்போன்றோர் எதையும் சொல்லித்தான் அறியவேண்டியவருமில்லை. எனவே ஐயா, மீண்டும் ''எண்ணித் துணிக'' என்று வேண்டிக் கொள்வதுடன், எம்போன்றோர் தங்கள் நினைவுகளில் வாழ்ந்து, உணர்வுகளில் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்றும் கூறிக் கொள்கிறேன்.

''சாணித் திரளைக்குள் நெளியும் சாதிப் புழுக்களை'' என்ன செய்யலாம் என்று கூறுங்கள்! மேலும் தமிழர்களை வேறு வேறாக்கிக் கூறுபோடும் கூட்டத்தையும் என்ன செய்யலாம் என்றும் விளக்குங்கள்.

— கணியன், புதுச்சேரி

○ : 1337 : அன்புடையீர், வணக்கம். நலம். நலம் விளைய நாடுகிறேன். ''தமிழ் நாட்டின் தலை எழுத்தே, இந்தியத் துணைக் கண்டத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும்'' என்று திரு. இராசீவ் மறைமலை நகரில் நடந்த பேராயக்கட்சி மாநாட்டின்போது கூறியதற்கேற்ப, தமிழ் நாட்டில் நடந்து முடிந்துள்ள தேர்தலின் முடிவுகள் காட்டிவிட்டன. பாரதமாதா, தமிழ்நாடு மற்றும் தமிழீழ நாட்டு தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள கரிசு(பாவங்)களுக்கு இராசீவ் தமிழ்த்தாயின் தூயதாள்களை 10 தடவைகளுக்கு மேல் பிடித்து (தமிழகக் குடிசைகள் தோறும் குனிந்து குனிந்து) கெஞ்சி மன்னிப்புக் கேட்டும் தமிழ்த் தாயின் தன்மான மிக்க மறத் தமிழர்கள் மன்னிக்கவில்லை என்பதையே இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன;

இந்த நிலையில் கலைஞர் அவர்கள் மேலும் தொடர்ந்து வரலாற்றுப் பிழைகள் ஏற்படாமல் தமிழையும். தமிழ் மக்களையும் சார்ந்துமே ஆளவேண்டும்; தாங்கள் நேரில் கூறியவாறும், ''தி.மு.க.வையே தமிழர்கள் வெற்றி பெறச் செய்க'' என்று எழுதியவாறும் தமிழர்கள் கலைஞரை வெற்றி பெறச் செய்துள்ளனர்; இன்றைய நிலையில் தமிழ் மக்கள் கலைஞரின் ஆட்சியில்: வரலாற்றில் நிலைக்கும்படியான செயல் திட்டங்களையே எதிர்நோக்குகின்றனர்.

தமிழ்மொழிக்கு வெற்றுரவார விளம்பரமின்றிப், பற்றுமிகு சீரிய செயல் திட்டங்களே வேண்டும். தமிழ்மொழி நாட்டளவில் ஆட்சியதிகாரத்துடன் தனக்குரிய முதன்மையான, முழுமையான இடம் பெற வகை செய்யவேண்டும்; சிறார்ப் பள்ளிகள் தொடங்கித் தொழில்நுட்பத் துறைகளின் முதுநிலைக் கல்வி வரையிலும், தமிழ் பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும், வேலை வாய்ப்புக்குரிய மொழியாகவும், வருவாய் தரும் வயிற்று மொழியாகவும்,வாழ்க்கையை வாழவைக்கும் வரலாற்று மொழியாகவும் ஆக்குவதற்குக் கலைஞரை முன் வரச் சொல்லுங்கள்! தமிழைக் கோயிலில் வழிப்பாட்டு மொழியாக்கச் சொல்லுங்கள்; ஏழைகளுக்கு ஞாயம் கிடைக்க அற மன்ற மொழி யாக்கச் சொல்லுங்கள்; பல நூற்றுத்துறைகளை உள்ளடக்கியுள்ள அறிவியல் தொழில் நுட்பங்களைக் கூற அறிவியல் தமிழாக்கத் திட்டங்கள் நீட்டிச் செயற்படக் கூறுங்கள்; முழுமையாகத் தமிழ் கூறும் நம் உலகை-தமிழ்நிலத்தை-ஆங்கில நாடாக மாறாமல், தடுத்தாளுமாறு வாழ்த்தி வரவேற்புக் கூறுங்கள்.

—முல்லையூரான், திருக்கோயிலூர்

O : 1338 : ஐயா, வணக்கம், உங்களுடைய முரசு எப்பொழுதும் ஒலிக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், கடந்த இதழில் அ'து இல்லை: காரணம், எதுவோ? எனக்குத் தெரியவில்லை: இ'து உங்கள் கலைஞர் பாசமோ? இல்லை ''வேசமோ''? தெரியவில்லை. காரணம்,

''கெஞ்சுவதில்லை பிறர்பால்'' என்பதும், உங்கள் கொள்கையைக் கட்டம் போட்டுப் போடும் துணிவும் எங்கே போனது என்று கேட்கும் உரிமையும் எனக்கு இருக்கிறது: ஆனல்,இருக்கும் தமிழனுக்கும் அது வேண்டும் இல்லையா? அதை ஏன் நிறுத்தினீர்கள் என்பது உங்களிடம் பழகிய எனக்கு விளங்கவில்லை. தமிழ்க் குடிமகன் மட்டும் போதும் என்று நினைத்துவிட்டீர்களா? நீங்கள் அப்படி நினைத்தாலும் உங்கள் (வழி) உண்மையான வழி வந்த என்னைப் போன்றோர் (நீங்கள்) முன்பு போல் கூறிய கருத்தை, உண்மையை, நிலை நிறுத்துவோம்; கலைஞரிடம் தாங்கள் இரவு(பிச்சை) கேட்க வேண்டாம்: அவர் தங்களை மதிக்கவேண்டும்: அது நீங்கள் கேட்டுப் பெறவேண்டியதில்லை; அதைச் செய்வார் என்று நம்புகின்றேன், ஏன் என்றால் அவரும் தமிழன் என்கின்றார்! தாழ்மையுடன்:

—வீ. பால்ச்சாமி, வீரபாண்டி;

பிழைதிருத்தம்!

'நமக்கு வந்த மடல்கள்' வரிசையில் சு 24, ஓ 8-இல் வெளிவந்த மடல் எண்கள் 1308 முதல் 1314 வரையுள்ளவற்றை 1320 முதல் 1326 ஆகவும், சு 24, ஓ 9-இல் 1315-முதல் 1321 வரையுள்ள எண்களை 1327 முதல் 1333 வரையுள்ள எண்களாகவும் திருத்திக் கொள்ளுங்கள்: பிழைக்கு வருந்துகிறோம்:

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)